சுதந்திரா வாசகம்

ஐந்தாம் வகுப்பு




சுதந்திரா பதிப்பகம்
சேலம்-2.

சுதந்திரா வாசகம்

ஐந்தாம் வகுப்பு

[1957இல் அரசியலார் நிர்ணயித்துள்ள பாடத் திட்டத்தின்படி எழுதப்பட்டுள்ளது.]



ஆசிரியர்:
C. S. இராஜாப் பிள்ளை,
ஓய்வு பெற்ற தமிழ்ப் பேராசிரியர்,
ஊர்ஹிஸ் காலேஜ், வேலூர்.



போன்: 3579

சுதந்திரா பதிப்பகம்
பப்ளிஷர்ஸ் & புக்செல்லர்ஸ்,
செவ்வாய்ப்பேட்டை :: சேலம்-2

1962 [விலை ரூ. 1-12 ந.பை.

முதற் பதிப்பு—1959
இரண்டாம் பதிப்பு—1960
மூன்றும் பதிப்பு—1961
நான்காம் பதிப்பு—1962

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
[Supplement to Part I-B, of the
Fort St. George Gazette dated 18-5-1960, Page 12]

[Paper used: D/C. 24 lbs. White Printing]

Kabeer Printing Works, Madras (4702)

முகவுரை

இப்புத்தகம், அரசியலாரின் புதிய பாடத் திட்டக் குறிப்புக்களுக்கிணங்க, ஐந்தாம் வகுப்பிற் குரியவாறு, பொருள் நயமும், சொல் நயமும் செறிந்து, காலப்போக்கை யொட்டிய பாடங்களால் தொகுக்கப் பெற்றுப் பிள்ளைகளது மொழிப் பயிற் சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும், ஏற்ற முறையில் 'சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல், நவின் றோர்க்கினிமை, நன்மொழி புணர்த்தல்' என்ற அழகுகள் அமைந்து, வெற்றெனத் தொகுத்தல் இன்றியும், முறை பயின்றோர் பேணும் வகையிலும் எழுதப் பெற்றுள்ளது.

பாடங்களின் பெயர்களும், கருத்துக்களும் பிள்ளைகளது உள்ளத்தை முற்போக்கான முறை யில் திருப்புவனவாகவும், சொற்கள் பெரும்பான் மையும் தனித்தமிழாகவும், உரைநடை எளியன வாகவும், இனியனவாகவும் அமைக்கப்பட்டுள.

பள்ளிக்கூட உரிமையாளர்களும், ஆசிரியர் களும் இச்சிறு புத்தகத்தைத் தங்கள் பள்ளிக் கூடங்களில் பாட புத்தகமாகத் தேர்ந்து போற்ற வேண்டு மென்பதே யாம் விரும்பும் கைம்மாறு.

ஆசிரியர்.

பொருளடக்கம்

எண்	பாடம்		பக்கம்
1.	இந்தியா	...	1
2.	காந்தி மகான்	...	6
3.	தமிழர்	...	13
4.	நன்மாணுக்கர்	...	18
5.	திருவள்ளுவர்	...	24
6.	கவரி வீசிய காவலன்	...	30
7.	தீப்பெட்டி	...	35
8.	சித்தன்ன வாசல் சிற்பங்கள்	...	40
9.	உடற் பயிற்சி	...	45
10.	மதுரை	...	50
11.	ஔவை தூது	...	56
12.	மான்கள்	...	63
13.	நிலக்கரியும் மண்ணெண்ணெயும்	...	68
14.	வேளாண்மை	...	73
15.	உபாயத்தால் ஆகாதது ஒன்றில்லை	...	78
16.	கடிதம் எழுதுதல்	...	82
17.	வாய்திறவாமல் படி	...	87
18.	நட்பு	...	91
19.	கைத்தொழில்	...	95

எண்	பாடம்		பக்கம்
20.	உத்தமர் உறவு	...	97
21.	ஒப்பற்ற ஊழியன்	...	102
22.	செய்தித்தாள்	...	107
23.	கவியரசரும் புவியரசரும் (1)	...	111
24.	கவியரசரும் புவியரசரும் (2)	...	116
25.	செய்யுட் பகுதி		
	1. வாழ்த்து	...	121
	2. நீதிப் பகுதி		
	1. நீதிவெண்பா	...	126
	2. அறநெறிச்சாரம்	...	127
	3. ஆசாரக்கோவை	...	128
	4. திருக்குறள்	...	129
	3. மங்கல வாழ்த்து	...	132

நாட்டு வணக்கம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே!
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனு கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவ ஜய காதா!
ஜன கண மங்கள தாயக ஜயஹே!
பாரத பாக்ய விதாதா
ஜயஹே! ஜயஹே! ஜயஹே!
ஜய ஜய ஜய ஜயஹே!

தேசீய கீதம்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான் மக்கள் எல்லோருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிருய்.

நின் திருநாமம், பஞ்சாபையும் சிந்துவையும் குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும் திராவிடத்தையும் ஒரிஸ்ஸாவையும் வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.

அது விந்திய, ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது. இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.

அவை நின் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப் பாடுகின்றன.

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி! வெற்றி! வெற்றி!

சுதந்திரா வாசகம்

ஐந்தாம் வகுப்பு

---

1. இந்தியா

"நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக்கு எழிலொழுகும், சீராரும் வதனமெனத் திகழ் பரத கண்டம்—" என்று மனோன்மணியம் என்ற நூலில் பரத கண்டம் எனப்படும் நம் இந்தியா புகழப்படுகிறது. பண்டைக்காலந் தொட்டே நம் இந்தியா நன்னாடுகளுள் முன்னாட்டும் நாடு ஆகும். மிகப் பழமை யான காலத்தில் **பரதன்** என்னும் மன்னன் இந்தியாவை ஒரு குடைக்கீழ் புகழ்பெற ஆண்டு வந்தான் என்பது வரலாறு. ஆகை யால் இப்பரந்த நாட்டிற்குப் பரத கண்டம் என்னும் பெயர் வழங்கப்படுவதாயிற்று.

'இந்தியா' என்ற பெயர் நமது தேசத் திற்குப் பிறநாட்டினரால் இடப்பெற்றது. சிந்து நதியைப் பாரசீகர்கள் 'ஹிந்து' நதி என்று வழங்கினர்; சிந்து கங்கைச் சம வெளியில் குடியேறியவர்களை 'ஹிந்து' என்று அழைத்தனர். உரோமர்கள் நமது நாட்டை இந்தியா என்று வழங்கினர்;

பிறகு இந்தியா என்ற பெயரே எல்லோராலும் வழங்கப்படுவதாயிற்று.

இந்தியா ஒரு பெரிய தேசம்; பண்டு தொட்டே இப்பூவுலகில் மிகவும் பெருமை பெற்ற நாடு; இயற்கைச் சிறப்புக்கள் பலவும் பெற்றது; குறிஞ்சி, முல்லை, மருதம், நெய் தல், பாலை என்னும் ஐவகை நிலங்களையும் தன்னகத்தே கொண்டது; நன்மக்களையும், செல்வச் சிறப்பையும் பெற்றது.

ஆகையால் கிரேக்கரும், மற்ற ஐரோப் பியரும், ஏனையரும் இந்த நாட்டின்மீது நாட் டம் கொண்டனர்; செல்வங்களைக் கொள்ளை கொண்டு செல்லவும் சில அயல் நாட்டினர் படையெடுத்து வந்தனர்; ஆட்சி செய்யும் நோக்கங் கொண்டும் சிலர் வந்தனர்; வர்த்த கம் செய்து பொருள் ஈட்டிச் செல்வதற்கும் சிலர் வந்தனர்; இங்கு இருந்து வாழ விரும் பிக் குடியேறினர்கள் சிலர். சிறிது காலத் திற்கு முன் இந்நாட்டை ஆண்டு வந்த ஆங்கி லேயரும் இதை ஒரு கண்ணாகக் கருதி வந்தனர்.

பற்பல காலங்களில் இந்தியாவின் பெருஞ் செல்வமெல்லாம் பிறநாட்டினரால் கொள்ளப் பட்டன. எனினும் இந்நாடு விவசாய நாடு;

பற்பல விளைபொருள்கள் விளைகின்றன. ஆதலின் நாம் பெரும்பொருள் அழியப் பெற்றும் பசிப்பிணியை ஆற்றிக்கொள்ளும் தகுதியைப் பெற்றிருக்கின்றோம். இனி வருங் காலத்தில் தொழிற்றுறைகளிலும், மற்றத் துறைகளிலும் வளர்ச்சியுற்றுப் பண்டுபோல் பெருமையுறுவோம். நம் அரசியலாரும் நாட்டின் முன்னேற்றங் கருதிப் பல நலன்களையும் புரிந்து வருகின்றார்கள்.

மிகப் பண்டைக் காலத்தில் இந்தியா ஐம்பத்தாறு நாடுகளைக் கொண்டிருந்தது. அந்நாடுகளைத் தனித் தனி வேந்தர்கள் ஆண்டு வந்தனர். காலப்போக்கில் அரசியல்களும், நாடுகளும் மாறின. அயல்நாடுகளிலிருந்து படையெடுத்து வந்த முஸ்லீம் மன்னர்கள், பல நாடுகளின் ஆட்சியைக் கைப்பற்றினர்கள். புதிய புதிய இராச்சியங்கள் தோன்றின. வட இந்தியாவிலும், தென் இந்தியாவிலும் பல முஸ்லீம் இராச்சியங்களும், இந்து இராச்சியங்களுமாக இருந்து வந்தன.

தென் பகுதியாகிய தமிழகம் மட்டும் சேர, சோழ, பாண்டிய நாடென மூன்று பெரிய இராச்சியங்களைக் கொண்டிருந்தது. அவைகளைச் சேரர், சோழர், பாண்டியர் என்னும் அரச மரபினர்கள் முறையே ஆண்டு வந்தார்

கள். ஒரு சில நூற்றுண்டுகளுக்கு முன் வரையில் தமிழகம் தனித் தமிழ் அரசு களாகவே இருந்தது; பிறகு முஸ்லீம் நவாப்பு களின் ஆட்சிக்கு உட்பட்டது. கடைசியில் ஆங்கிலேயர்கள் இந்தியாவில் பெரும் பகுதி களை ஆண்டார்கள்; மற்றப் பகுதிகளைப் பல இந்து, முஸ்லீம் மன்னர்கள் ஆண்டார்கள். ஆயினும் அச்சு தேச மன்னர்கள் ஆங்கிலேய ஆட்சிக்கு உட்பட்டு இருந்தார்கள்.

1947ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள், பதினைந்தாம் நாளில் இந்தியா சுய ஆட்சியைப் பெற்றது. இப்போது பாகிஸ்தானம் என்ற பகுதியை முஸ்லீம் மக்களும், மற்றப் பகுதி களை இந்தியா என்ற பெயரொடு இந்துக்களும், மற்றவர்களுமாக ஆட்சி செய்து வருகிறோம்.

இந்தியா பல இராச்சியப் பிரிவுகளை உடையது. அவற்றுள் தென்னிந்திய இராச் சியங்கள் பெரும்பாலும் மொழிவாரியாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. மொழி பேசும் வகையில் நாம் பல சமூகத்தினர்கள் ஆவோம். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலியன தென்னிந்திய மொழிகள். இந்தி, குசராத்தி முதலியன வடஇந்திய மொழிகள். இந்தியர் என்ற முறையில் நாம் ஒரே சமூகத் தினர்கள் ஆவோம். நாம் எல்லோரும் ஒற்று

மையும், நட்பும் கொண்டு ஒருவருக்கொருவர் உதவியாக வாழ்ந்து இந்தியாவின் பெருமை யைப் பாதுகாக்க வேண்டும்.

அருஞ்சொல் விளக்கம்

நீராரும் கடலுடுத்த - நீர் நிறைந்த கடலை ஆடை யாகக் கொண்ட, எழில் - அழகு, வதனம் - முகம், நாட்டம் - நோக்கம், தீபகற்பம் - மூன்று பக்கங்களில் நீரினாலும், ஒரு பக்கத்தில் நிலத்தாலும் சூழப்பட்ட நிலப் பரப்பு; பீடபூமி - மலையை அடுத்துள்ள மேட்டுப் பாங் கான நிலப்பரப்பு.

வினாக்கள்

1. மனோன் மணியத்தில் நம் நாடு எவ்வாறு புகழப் படுகிறது?
2. பரத கண்டம் என்ற பெயர் எவ்வாறு வழங் கலாயிற்று?
3. இந்தியா என்ற பெயர் எவ்வாறு ஏற்பட்டது?
4. தென்னிந்திய இராச்சியங்கள் இப்போது பெரும் பாலும் எவ்வாறு பிரிக்கப்பட்டிருக்கின்றன?

இலக்கணம்

1. மொழியின் இயல்பை விளக்குவது இலக்கணம்.
2. மொழியைச் செம்மையாகப் பேசுவதற்கும், எழுதுவதற்கும் இலக்கண அறிவு இன்றியமை யாதது.
3. தமிழ் இலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்து வகைப்படும்.



2. காந்தி மகான்

இந்தியாவைப் பற்றி எண்ணும்போது காந்தி மகானைப்பற்றி நினைக்க வேண்டும். பண்டைப் பெருமைகளை இழக்கப்பெற்று, பிறநாட்டினராம் ஆங்கிலேயரின் ஆட்சிக்கு அடிமைப்பட்டு, உரிமைகளைப் பறிகொடுத்து எழில் மங்கியிருந்த நம் இந்தியத்தாயை உலக சரித்திரத்தில் முன்னம் எக்காலத்திலும் கேட்டிராத சாத்துவிகப் போர் தொடர்ந்து, வாட்போர், வெடிப்போர் முதலியனவும், குருதி சிந்தலும் இல்லாமல் விடுதலை பெறச்செய்து எழில் விளங்கச் செய்த மகான் அன்றோ அவர்! இந்திய மக்களின் தந்தையன்றோ அப் பெரியார்! உலகம் போற்றும் உத்தமர் அன்றோ அவ்வீரர்! அவருடைய கடவுளன்பை நோக்கி உவப்புற்ற அன்னி பெசண்டு அம்மையார்

அவரை மகான் என்று முன்னமே வழங்கினர் என்பது வரலாறு.

தம் நலம் கருதாமலும், பிறரைத் துன் புறுத்தாமை என்ற அறத்தை மேற்கொண்டும், உடல், பொருள், ஆவியென்னும் மூன்றையும் இந்தியத் தாய்க்கே உரிமையாக்கினர். எளிய வாழ்க்கை வாழ்ந்து, எல்லோரையும் விரும்பும் இயல்புடையவராய் ஒழுகி, எல்லோராலும் விரும்பப்படுபவராய் இருந்தார். அவர் இறை வனை மறவாத உள்ளத்தினராய், ஓர் அறிவிலி யால் சுடப்பட்டு உயிர் நீத்தார். அப்பெரு மானை நாம் காந்தியடிகள் என்று போற்று கிறோம்; பல ஊர்களிலும் உருவச் சிலைகளை நாட்டி, அவரைச் சிந்தித்துக் கை கூப்பித் தொழுகிறோம்.

செயற்கரிய செய்து புகழுடம்புடன் விளங்கும் அன்னாரின் வரலாற்றைப் பற்றி அறிய, பள்ளிப் பிள்ளைகளாகிய நீங்கள் ஆவல் கொள்வீர்கள் அல்லவா ?

காந்தியாருக்குக் குழந்தைப் பருவத்தில் பெற்றோர் இட்ட பெயர் மோகனதாஸ் கரம்சந்த் காந்தி. காந்தி என்பது மரபுப் பெயர். **போர் பந்தர்** என்ற ஊர் இவருடைய பிறப்பிடம். 1869ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள், இரண்

டாம் தேதி இவர் பிறந்த நன்னுள். இவருடைய தந்தையார் பெயர் காபா காந்தி; தாயார் பெயர் புத்தலிபா. இராசக்கோட் மன்னர்பால் இவருடைய தந்தையார் திவாளுகச் சிறப்புற்று விளங்கினுர்.

மோகனதாஸ் காந்தி இளமையில் தம் தாய் மொழியாகிய குசராத்தியை எழுதப் படிக்கத் தெரிந்து கொண்டார். பிறகு உயர் தரப் பள்ளியில் ஆங்கிலக் கல்வியும் பயின்று 18ஆம் ஆண்டில் மெட்ரிகுலேஷன் தேர்வில் தேறினுர். பன்னிரண்டு வயதிலேயே இவருக்குத் திருமணம் நிறைவேறியது. இவருடைய மனைவியார் பெயர் கஸ்தூரிபாய். பதினுறு வயதில் இவர் தந்தையாரை இழந்தார். பிறகு இவர் இங்கிலாந்து சென்று சட்டக் கல்வியும் கற்ருர்; பாரிஸ்டர் என்னும் பட்டம் பெற்றுத் தாய்நாடு திரும்பினுர்.

இவர் இங்கிலாந்துக்குப் புறப்பட்டபோது, இவருடைய தாயார் இவரிடம் "மைந்தனே, நீ புலால் புசியேல்; பொய் பேசாதே; கட்குடியைக் கொள்ளாதே" என்று நல்லுரைகள் கூறி அனுப்பினுர். "தாய் சொல் துறந்தால் வாசகம் இல்லை" என்ற சீரிய உண்மைக்கிணங்க மோகனதாஸ் அவ்வாறே தம் வாழ்நாளில் எக்காலும் கடைப் பிடித்து ஒழுகினுர்.

பாரிஸ்டர் மோகனதாஸ் காந்தி சிறிது காலம் வரையில் பம்பாயில் வழக்கறிஞராக இருந்தார்; பிறகு இராசக்கோட் சென்று வாழ்ந்தார். தம் பணியில் இவருக்கு ஏற்ற வருவாயும் கிடைத்தது. இவ்வாறிருக்கையில் ஒரு வர்த்தகக் கம்பெனியின் வழக்கை நடத்துவதற்காகத் தென் ஆப்பிரிக்கா சென்றார். அந்நாடு வெள்ளையர் ஆட்சிக்கு உட்பட்டது. இந்தியர்களிலும் பலர் அங்குக் குடியேறியிருந்தார்கள். அந்நாட்டில் இந்தியர்கள் தக்க முறையில் நடத்தப்படவில்லை. நிறவேற்றுமை என்னும் பேய் அவ்வெள்ளையரின் உள்ளத்தில் குடிகொண்டிருந்தது. அம்முறையை மோகனதாஸ் மிக வெறுத்தார். தாம் மேற்கொண்ட வழக்கு முடிந்த பிறகும் ஆண்டே சில காலம் தங்கினார். வெள்ளையரின் ஆட்சி முறையில் இந்தியருக்கு உரிமையின்றி யிருந்ததைப் பற்றி எதிர்ப்புப் போராட்டங்கள் நடத்தினார். வெள்ளையர்கள் இவரைச் சிறையிலும் அடைத்தார்கள்; இடுக்கண் உற்றதற்காக இவர் தளர்ச்சி பெறவில்லை; இறுதியில் தம் போராட்டத்தில் ஓரளவு வெற்றியும் எய்தினார். பின்னர் தாய் நாட்டின் விடுதலைப் போரில் தொண்டு செய்யக்கருதி இந்தியாவை அடைந்தார்.

மோகனதாஸ் காங்கிரஸ் கட்சியில் ஈடு பட்டு விடுதலைப் போராகிய சுயராச்சியக் கிளர்ச்சியில் ஈடுபட்டார். "இந்தியா வெற்றி பெற வேண்டுமானால் மக்களுக்குள் வேற்றுமை ஒழிக்கப்பட வேண்டும்; தாழ்த்தப் பட்டோர் உயர்த்தப்பட வேண்டும்; நம்முடைய தேவைகளை நாமே உற்பத்தி செய்ய வேண்டும்; உடை, உணவு முதலியவைகளுக்காக நாம் பிற நாட்டினரின் உதவியை எதிர் பார்க்கக் கூடாது" என்ற சீரிய நோக்கங்களை வெளியிட்டார். ஆகவே அரிசன முன்னேற்றம், கதர் உற்பத்தி முதலிய இயக்கங்களைத் தொடங்கினார். பலமுறை சிறை செய்யப் பட்டார். அவற்றைக்கண்டு அவர் அச்சமும் தளர்ச்சியும் கொள்ளவில்லை. தம்முடைய கொள்கைகள் நிறைவேறுவதற்காக உண்ணா விரதங்களும் இருந்தார்.

மற்றத் தலைவர்களும், எல்லாத் தொண்டர்களும் காந்தியாரின் கட்டளைகளையே மறை மொழியாகக் கொண்டு, அவர் கூறியவாறே பின்பற்றினார்கள். ஆங்கிலேயரையோ, வேறு எச்சமூகத்தினரையோ காந்தியார் வெறுக்க வில்லை. எல்லோருடைய நட்பையும் அவர் நாடினார். ஆங்கிலேயருடைய ஆட்சியை மட்டும் அவர் விரும்பவில்லை. "நம்முடைய

நாட்டை நாமே ஆளவேண்டும்'' என்பதே அவருடைய குறிக்கோள் என்பதை விளக்கினர்.

காந்தியாரின் கூற்றை உலகமே ஒப்புக்கொண்டது. இந்தியச் சக்கரவர்த்தியாக விளங்கிய இங்கிலாந்து மன்னரும் காந்தியாரைத் தம்பால் வரவேற்றுப் பேசினர். அவருடைய குறிக்கோளை ஏற்றுக்கொண்டார். பாராளும் மன்றத்தாரும் அவ்வாறே ஒப்பினர். உண்மையை யேற்க யார்தான் மறுப்பர்?

1947ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம், 15ஆம் நாள் இந்தியாவிற்கு சுய ஆட்சி அளிக்கப்பட்டது. முஸ்லீம்கள் மிகுதியாக உள்ள பகுதிகள் **பாகிஸ்தான்** என்ற பெயரில் முஸ்லீம்களின் ஆட்சியில் விடப்பட்டன. மற்றப் பெரும் பகுதிகள் இந்தியா என்ற பெயரொடு இந்துக்கள், கிறிஸ்தவர்கள் முதலோராகிய மற்றக் குடிகளின் ஆட்சியில் விடப்பட்டன. புதிய இந்தியாவில் இருந்த சுதேச மன்னர்களும் தங்கள் ஆட்சியை டெல்லி அரசுடன் இணைத்து விட்டார்கள். இந்திய யூனியன் என்ற பெயருடன் டெல்லியில் மத்திய அரசாங்கம் நடைபெறுகிறது. அதற்குட்பட்டு இராச்சிய ஆட்சிகள் ஆங்காங்குள்ளவர்களால் நடத்தப்படுகின்றன. 1950ஆம் ஆண்டு ஜனவரித்

திங்கள், 26ஆம் நாள் இந்தியா குடியரசு நாடு ஆயிற்று. இப்பெருமை யெல்லாம் காந்தியாருக்கே அன்ருே? இப்போது நம்முடைய நாட்டை நாமே ஆள்கின்ருேம்.

அருஞ்சொல் விளக்கம்

மகான் - சீரியர், (செயற்கரிய செய்பவர்) அடிகள் - தம் நலம் துறந்த பெரியார், உத்தமர் - தலையாயவர், (உத்தமம், மத்திமம், அதமம் என்பன வடமொழிச் சொற்கள். தலை, இடை, கடை என்பன தமிழ்ச் சொற்கள்.) பிறரைத் துன்புறுத்தாமை - இதனை வடமொழியில் 'அஹிம்சா தர்மம்' என்பர். புலால் - இறைச்சி, வழக்கறிஞர் - வக்கீல், ஆண்டே - அங்கேயே (ஆண்டு - அங்கு, வருடம் என இரு பொருள் உடையது.) குறிக்கோள் - குறிப்பிட்ட எண்ணம்.

வினக்கள்

1. இந்தியத் தாய் எவ்வாறு எழில் மங்கி இருந்தாள்?
2. காந்தியடிகள் இந்தியத்தாயை எவ்வாறு விடுதலை பெறச் செய்தார்?
3. காந்தியார் ஏன் தென்னுப்பிரிக்கா சென்ருர்?
4. தென்னுப்பிரிக்காவில் மோகனதாஸ் ஆற்றிய அருஞ்செயல் யாது?
5. நம் நாட்டின் முன்னேற்றம் கருதிக் காந்தியார் வெளியிட்ட சீரிய கொள்கைகள் யாவை?

3. தமிழர்

நாம் தமிழர், தமிழகம் நமக்குத் தாய் நாடு. தமிழகத்தின் நாட்டு மொழி தமிழ். தமிழர்களுக்குத் தாய் மொழி தமிழ். தமிழர் கள் தமிழ் நாட்டிற்குரிய குடிகள்.

மிகப் பழங் காலத்திலிருந்தே தமிழர்கள் சீரிய வாழ்க்கை உடையவர்கள். தமிழர்கள் நாடுகளை அமைத்துக் கொண்டும், அரசியல் முறைகளை வகுத்துக் கொண்டும் சிறப்பாக வாழ்ந்தவர்கள். ஆட்சி முறையில் தமிழ் வேந்தர்கள் ஒப்புயர்வற்ற ஆற்றலும், நேர்மை யும், உடையவர்களெனின் மிகையாகாது.

வட இந்தியாவில் இராச்சியங்கள் பலவாறு மாறின; ஆளும் மரபினரும் மாறினர்கள். சூரிய, சந்திரகுல மன்னர்கள் மறைந்தார்கள்; இராசபுத்திர மன்னர்கள் ஓங்கினர்கள்; முஸ்லீம் மன்னர்கள் படையெடுத்து வென்று ஆட்சியைக் கைப்பற்றினர்கள்; அவர்களிலும் பல மரபினர்கள் மாறினர்கள். தென்னிந்தியா விலும் தமிழகத்திற்கு வடக்கில் இராச்சியங்கள் மாறின; அரச மரபினர்களும் மாறினர்கள்.

சேர, சோழ, பாண்டியர்கள் எண்ணற் கரிய பல்லாயிரம் ஆண்டுகள் தொன்று

தொட்டு ஆட்சி செய்தார்கள். ஒரு சில நூற்றுண்டுகளுக்கு முன்னர்தான் தமிழகம் பிற நாட்டினர் ஆட்சிக்கு உட்பட்டது. இந் நிலையும் தமிழ் மூவேந்தர்களின் மரபுகள் முடிவு பெற்றதாலெனின் இழுக்கல்ல.

நெடுஞ்சேரலாதனும், சேரன் செங்குட்டு வனும் இமயம் வரையில் படையெடுத்துச் சென்று, பல நாட்டு மன்னர்களையும் வென்று வாகைசூடி, இமயம் வரையில் தங்கள் விற் கொடியைப் பொறித்து வைத்தனர். கரிகாற் பெருவளத்தான் என்ற சோழ மன்னனும் அவ்வாறே பகைவர் ஏருய் விளங்கிப் பல நாடு களையும் வென்று, இமயமால் வரையை யடைந்து அங்குத் தன் புலிக் கொடியைப் பொறித்தான். இந்நிகழ்ச்சிகளிலிருந்து தமிழ் வேந்தர்களின் வீரமும், போர் வன்மையும் விளங்குகின்றன.

கோவலனை ஆராயாது கொன்ற பிழைக் காகப் பாண்டியன் "யானே மன்னன்" என்று கூறிக் கொண்டே மண்ணிற் சாய்ந்து மாண்டான். தன் மைந்தன் தேரூர்ந்த போது தேர்க்காலில் விழுந்து இறந்த கன்றின் பிரிவாற் கலங்கிய தாய்ப் பசுவின் துயரத்தை ஆற்றுவதற்காக, மனு நெறிச் சோழன் தன் மைந்தனைத் தேர்க்காலில் கிடத்தித் தானே

அவன் மீது தேரைச் செலுத்தினன். இந் நிகழ்ச்சிகளினின்று தமிழ் மன்னர்கள் நேர்மையை எவ்வாறு காத்தனர் என்பது புலனுகின்றது.

யாவராயினும் சட்டம் ஒன்றே; நீதியைப் பாதுகாப்பதே மன்னன் மாண்பு; தானே குற்றம் செய்தாலும் மன்னன் தானே தன்னை ஒறுத்துக் கொள்வான். பழிக்கு அஞ்சும் பண்பு இருந்தது; மானத்திற்குக் குறைவு ஏற்பட்டால் உயிர் துறப்பனே அன்றி மானங் கெட்டு வாழமாட்டான் மன்னன். மன்னுயிரெல்லாம் தன்னுயிர் போல் எண்ணிக் குடிகளைக் காத்து வந்தான் கொற்றவன். நாட்டின் நலனையே நாட்டமாகக் கொண்டான் அரசன்.

"மன்னன் எவ்வழி அவ்வழி மக்கள்" என்றவாறு குடிகள் சட்டத்திற்கு உட்பட்டவர்களாயும், கடமை தவருதவர்களாயும், நாடு தம்முடையது என்ற உணர்ச்சியை உடையவர்களாயும், வாழ்ந்து வந்தார்கள். அடுத்தவரைக் காத்தல், இரப்போர்க் கீதல், அறங்களை வளர்த்தல், விருந்தினரைப் போற்றுதல், கலைஞர்களை ஊக்கப்படுத்துதல், தொழில்களை வளர்த்தல், மரபின் பெருமையைக் காத்தல், முயற்சி உடைமை முதலிய பண்பாடுகளை உடையவர்களாய் வாழ்ந்தார்கள். "அறஞ்

செய விரும்பு, ஊக்கமது கைவிடேல், ஏற்பது இகழ்ச்சி, ஐயம் இட்டு உண், சக்கர நெறி நில், நன்மை கடைப்பிடி, பொருள் தன்னைப் போற்றி வாழ், பூமி திருத்தி உண், நேர்மைப் பட வாழ்'' என்று இவ்வாறான எண்ணங் களைத் தொடக்கப் பள்ளிகளிலேயே இளஞ் சிறுர்களுக்கு ஓதி வைத்தார்கள் ஆசிரியர்கள். அவ்வெண்ணங்கள் பசுமரத்தாணி போல் இளம்பிள்ளைகளுடைய உள்ளங்களில் பதிந் தன. வாழையடி வாழையாகத் தோன்றிய இளஞ்சிறுர்கள் தம் முன்னேர் போன்றே சிறப்புற்று வாழ்ந்தார்கள்.

மேற்கூறிய சீரிய தன்மைகள் இன்றும் தமிழர்கள்பால் விளங்குகின்றன. அறிவிலும், திறமையிலும், பண்பாட்டிலும் தமிழ் மக்கள் மற்றவர்களைவிடக் குறைந்தவர்கள் அல்லர். இற்றை நாள் தமிழ் மக்களும் நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும் முற்றிலும் உடையவர்கள். பண்டைக் காலம் போலவே இனிவருங் காலத் திலும் சிறப்பாக விளங்கவேண்டு மென்பதே தமிழர்களின் உள்ளம். இந்நோக்கத்திற் கிணங்கக் கல்வியிலும், தொழிலாக்கத்திலும் முன்னேற்றமடைந்து வருகின்றனர். நல்வழி யில் நம் தமிழர்கள் மற்றவர்களுக்கும் வழி காட்டிகளாய் முன்னேறி விளங்குவார்களாக.

அருஞ்சொல் விளக்கம்

தாய்மொழி - பிறப்பிலேயே பேசும் மொழி. (தாய் மொழி, நாட்டு மொழி, அரசியல் மொழி, உலக மொழி, கலை மொழி என்பன பல.) சமூகம் - தொகுதி, இனம். இராச்சியம் - நாடு, பொறித்து - செதுக்கி வைத்து. ஏறு - ஆண் சிங்கம், சிங்கம் - வடமொழிச் சொல். அரிமா - தமிழ்ச் சொல், இமம் - பனி, (இமம் வடமொழிச் சொல், பனி - தமிழ்ச் சொல்.) மால்வரை - பெரியமலை, அடுத்த வரை - தஞ்சம் என்று அண்டி வந்தவரை, ஐயம் - பிச்சை, சந்தேகம் என இருபொருட் சொல். சந்தேகம் வடமொழிச் சொல், ஐயம் தமிழ்ச் சொல், உண்மைப் பொருள் விளங்காமல் இருப்பது ஐயம்.

வினாக்கள்

1. இமயம் வரையில் சென்று வாகை சூடிய தமிழ் மன்னர்கள் யாவர்?
2. தமிழ் வேந்தர்களின் சீரிய தன்மைகளைப்பற்றிக் கூறுக.
3. தமிழ்க் குடிகளின் பண்பாடுகள் யாவை?
4. வருங்காலத்தில் நாம் எவ்வாறு விளங்க வேண்டும்?

இலக்கணம்

தமிழ் எழுத்துக்கள் நான்கு வகைப்படும். அவை உயிர், மெய், உயிர்மெய், ஆய்தம் என்பன. அ முதல் ஔ வரையிலுள்ள 12உம் உயிரெழுத்துக்கள். க் முதல் ன் வரையிலுள்ள 18உம் மெய்யெழுத்துக்கள். க முதல் னௌ வரையிலுள்ள 216உம் உயிர்மெய் எழுத்துக்கள், ஃ என்பது ஆய்த எழுத்து. தமிழில் வழங்கும் எழுத்துக் களின் தொகை 247.

4. நன் மாணுக்கர்

ஆசிரியரை யடுத்துக் கல்வி கற்கும் இளைஞர்கள் மாணுக்கர் எனப்படுவர். மாணுக் கருக்குரிய இயல்புகளைப் பெற்று, தமக்குரிய கடமைகளைச் செய்தொழுகிப் பயன் பெற்று முன்னேறக் கூடியவர்கள் நன் மாணுக்கர் ஆவர்.

முற்காலத்தில் நல்லாசிரியர்களின் தொகை யும் குறைவு; கற்பவரின் தொகையும் குறைவு; கற்பதற்கு வேண்டிய வசதிகளும் குறைவு. எங்கேனும் ஓர் ஊரில் கற்ற பெரியோர்கள் காணப்படுவர்; பலர் அவர் பால் இருந்து கற்றல் இயலாது. நூல்கள் கிடைப்பதும் அக்காலத்திலே மிக அரிது. ஒரு சில நூல் களை ஓர் ஆசிரியர் ஏட்டுச் சுவடியில் எழுதி வைத்திருப்பர். அவர்பால் அணுகியிருந்து அந்நூலைக் கேட்டறிய வேண்டும். வேறு பல நூல்களைக் கற்கவேண்டுமெனில், அந்நூல் கிடைப்பது யார் பாலோ என்று அலைய வேண்டும்.

இக்காலத்திலோ வெனில் எல்லா ஊர்களி லும் தொடக்கப் பள்ளிகள் நடைபெறுகின்றன. உயர்நிலைப் பள்ளிகளும் ஆங்காங்கு பெருகி வருகின்றன. கல்லூரிகளும் பல ஏற்படு

கின்றன. தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களும், பேராசிரியர்களும் ஆயிரக் கணக்கில் உளர். எல்லாக் கலைகளிலும் நூல்கள் பல பல்லாயிரக் கணக்கில் அச்சாகி ஆண்டு தோறும் வெளி வருகின்றன. வசதிகள் யாவும் அமைந்துள்ள இக்காலத்தில் மாணவர்கள் கல்வி கற்பது எளிதன்றோ? ஆகையால் கல்வி கற்கும் முறைகளை அறிந்தொழுகி நீங்கள் நன் மாணாக்கர்களாக விளங்கவேண்டும்.

நன் மாணாக்கர்கள் ஆவையும், அன்னத் தையும் ஒப்பர். ஆ என்பது பசு. இவ்விலங்கு நல்ல பசும் புற்கள் உள்ள இடத்தைத் தேடிச் சென்று அங்கு வயிறார மேயும்; பிறகு ஓரிடத் தில் படுத்துக்கொண்டு, மேயும்போது விழுங் கிய உணவை மீண்டும் வாய்க்குக் கொண்டு வந்து அதை நன்கு மென்று நீர்ப் பொரு ளாக்கி விழுங்கும். அது போன்றே ஏற்ற ஆசிரியரை அடுத்து அவர் பால் கற்பன வற்றை முற்றிலும் கற்கவேண்டும். அன் றன்று கேட்ட பாடங்களை வீட்டிற்குச் சென்ற பிறகு மீண்டும் சிந்தித்து நினைவிற்குக் கொண்டு வந்து அவற்றை மறவாமல் நினை வில் வைத்துக் கொள்ள வேண்டும். இம் முறையில் பிள்ளைகள் ஒரு பள்ளியில் நிலைத் துக் கற்க வேண்டும்; ஒரு பிரிவில் ஆண்டு

முழுவதும் நிலைத்து இருக்கவேண்டும் என்று புலனாகிறது. "......கேட்டவை நினைத்தல், அம்மாண்புடையோர் தம்மொடு பயிறல், வினா தல் வினயவை விடுத்தல் என்றிவை கடனாக் கொளினே மடநனி இகக்கும்'' என்றார் புலவர்.

வகுப்பில் ஆசிரியரிடம் கேட்ட பாடங் களைப்பற்றி வீட்டில் சிந்திக்கும்போது ஐயங் கள் ஏற்படலாம்; அவைகளை மறுநாள் வகுப் பிற்குச் சென்றதும், ஆசிரியரிடம் அமைதியா கக் கேட்டறிந்து விளக்கம் பெற வேண்டும்.

சேர்ந்து படிக்கும் பிள்ளைகள் கற்ற பாடங்களில் ஒருவரை யொருவர் கேள்விகளைக் கேட்க வேண்டும். ஒருவர் கேட்ட கேள்விக்கு மற்றவர்கள் விடை கூற வேண்டும். இம் முறைகளைக் கையாடினால் அறியாமை மிகவும் அகலும்; அதாவது நல்ல தேர்ச்சி ஏற்படும்.

அன்னம் என்பது ஒரு புள். இப்புள்ளைப் பற்றியும், இதன் இயல்பைப் பற்றியும் நூல் களில் அறிகின்றோம்; ஆயினும் இப்போது நம் நாட்டில் எங்கும் காண்பதற்கரிது. எவ்வா றாயினும் அக்காலத்தில் அன்னப்புள் காண்ப தற் கெளியதாக எங்கும் இருந்திருக்க வேண் டும். அதனால் இப்பெயர் நூல்களில் கூறப் படுகிறது என்று கொள்ளலாம். அன்னப்புள்

வெண்ணிற உடலும், செந்நிறக் கால்களும் உடையது ; ஏறக்குறையப் புருவைப் போன்றது. தாமரை மலரின்மேல் வீற்றிருப்பதில் இப்புள் விருப்பமுடையது. இதன்முன் ஒரு கலத்தில் நீர் கலந்த பாலை வைத்தால், இது பாலை மட்டும் தனியே பிரித்துப் பருகும் ஆற்றல் பெற்றது; பாலுடன் கலக்கப் பெற்ற நீர் தனியே நின்றுவிடும். இம்முறையில் நன் மாணுக்கர் ஆசிரியர்பால் கொள்ளக்கூடிய கல்விப் பொருளையும், பண்புகளையும் மட்டுமே கொள்ள வேண்டும்.

நன் மாணுக்கர்கள் பொழுதொடு பள்ளிக்குச் செல்ல வேண்டும் ; ஆசிரியரின் பண்பிற்கேற்றவாறு நன்முறையில் பழக வேண்டும். அவருடைய குறிப்பறிந்து அதற்கேற்றவாறு செய்வன செய்ய வேண்டும். 'அமர்க' என்று கூறிய பிறகு வகுப்பில் உட்கார வேண்டும் ; பாடம் முடிந்ததும் 'போ' என்று கூறிய பிறகு வகுப்பை விட்டு வெளியே செல்லவேண்டும்.

ஆசிரியர்பால் பழகும் முறையையும் நன் மாணுக்கர்கள் அறிந்தொழுக வேண்டும். தீயினிடத்துக் குளிர்காயும் போது அகன்ருலும் குளிர் நீங்காது ; மிக நெருங்கினுல் தீ சுட்டு விடும் ; அவ்வாறே மாணுக்கன் நிழல்போல் ஆசிரியருடன் இருந்து பழக வேண்டும்.

"நம்முடைய ஆசிரியர் அன்புடையவர். எப்பிழை செய்யினும் பொறுப்பர்" என்று எண்ணங்கொண்டு, அவர்பால் மிகச் சலுகையை எதிர்பார்க்கக் கூடாது; அச்சமும், அன்பும் உடையவராய் அவருடன் பழக வேண்டும்.

எவ்வாறு நடந்துகொண்டால் ஆசிரியர் உவப்பு எய்துவரோ, அவ்வாறு நன்முறையில் அவரை வழிபட்டு நலம்பெற வேண்டும்.

பிள்ளைகளே! இம்முறைகளை மேற்கொண்டொழுகி நீங்கள் கல்வித் தேர்ச்சியும், பண்பும் பெற்றுப் பயனுற வாழ்வீர்களாக.

அருஞ்சொல் விளக்கம்

ஏட்டுச் சுவடி - பனையேடுகளில் எழுதித் தொகுக்கப் பெற்ற புத்தகம், சுவடி - தமிழ்ச் சொல், புத்தகம் - வடமொழிச் சொல், சார்ந்து - அடைந்து, அமைவுற - அடக்கமும் பொறுமையும் கொண்டு, வினவியவை விடுத்தல்-கேட்ட கேள்விகளுக்குத் தக்க விடைகளைக் கூறி விளக்குதல், கடனாக் கொளின் - கடமையாகக் கொண்டால்.

வினாக்கள்

1. கல்வி பயில்வதில் பண்டைக் காலத்தில் இருந்த முறைகள் யாவை?
2. இக்காலத்தில் கல்வி பயில்வதற்குரிய வசதிகள் யாவை?
3. நன்மாணாக்கர் கொள்ள வேண்டிய முறைகளைப் பற்றிச் சுருக்கிக் கூறுக.

இலக்கணம்

பூ - இது தனியே ஓர் எழுத்து. மலர் என்ற பொருளை யும் குறிக்கும். பொருளைத் தரும்போது **பூ** என்பது ஒரு சொல்.

கனி - இதில் பல எழுத்துக்கள் தொடர்ந்து நிற்கின் றன. பொருளைத் தருகின்றன. ஆகையால் கனி என்பது சொல்.

எழுத்துக்கள் தனித்தேனும், பல தொடர்ந்தேனும் நின்று பொருளைத் தந்தால் சொல் எனப்படும்.

பயிற்சி

1. ஓரெழுத்துச் சொற்கள் ஐந்து கூறுக.
2. பல எழுத்துக்களாலாகிய சொற்கள் பத்து கூறுக.
3. பின் வருவனவற்றில் எவை யெவை சொற்கள்?

   கா, கை, தெ, தா, ரூ, மா, யா, நீ, வீ, ஈ, பலா, ஞு, நாஞு, மன்றம், தீம், வாழ், வெற்றி, பலியி, கும்ண, தூய.



5. திருவள்ளுவர்

மக்களுக்கு ஒழுக்கமே உயிர். ஒழுக்கம் உள்ளவர்களையே உலகோர் விரும்புவர். அவர்களே சிறந்தோர்கள். ஒழுக்க நெறிகளை அறிவுறுத்தும் நூல்கள் பல உண்டு. அவை நீதி நூல்கள் எனப்படும். அத்தகைய நீதி நூல்களில் தலை சிறந்தது திருக்குறள். திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர்.

திருவள்ளுவரின் தந்தை பெயர் பகவன். தாயார் ஆதி என்னும் பெயருடையவள். பகவன் ஆதியுடன் ஓர் ஒப்பந்தம் செய்து

கொண்டார். எந்த இடத்தில் எந்தக் குழந்தை பிறந்தாலும் அந்தக் குழந்தையை அந்த இடத்திலேயே விட்டுவிட்டு வந்துவிட வேண்டும் என்பது அவ்வொப்பந்தம். அதற்கு ஆதி இசைந்தாள். இருவரும் பல ஊர்களுக்குச் சென்றனர்.

செல்லும் வழியில் ஒவ்வோரிடத்தில் ஒவ்வொரு குழந்தையாக ஏழு குழந்தைகள் பிறந்தன. பிறந்த குழந்தைகளை அவ்வவ்விடத்திலேயே விட்டுப்போக வேண்டுமென்பது ஒப்பந்தமன்றோ? ஒப்பந்தம் எவ்வாறாயினும், பிறந்த சேயைத் தனியே கிடத்திவிட்டுச் செல்லத் தாய் உள்ளம் கொள்வாளோ? பிறந்த குழந்தையை நோக்கி அவளுடைய உள்ளம் ஊசலாடும். அக்குழந்தைகள் கடவுட்டன்மை உடையவை. ஆதலின் பிறந்த குழந்தை அன்னையைத் தேற்றி ஒரு பாவைப் பாடும். பிறகு அவளும் ஒப்பந்தப்படி தன் கணவனைத் தொடர்ந்து வேற்றூர் செல்வாள். தனியே கிடந்த குழந்தைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவரால் எடுத்து வளர்க்கப்பட்டன.

ஆதியும் பகவனும் மயிலாப்பூருக்கு வந்தனர். அங்கு அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. தாய் தந்தையர் அதனை

விட்டுப் பிரியவேண்டுமன்றோ? அப்பொழுது ஆதி மகவைப் பிரியப் பெரிதும் வருந்தினாள். அக்குழந்தை,

எவ்வுயிரும் காக்கவொரு ஈசனுண்டோ இல்லையோ
அவ்வுயிருள் யானொருவ னல்லனோ—வவ்வி
அருகுவது கொண்டிங் கலைகுவதேன் அன்னாய்
வருகுவது தானே வரும்.

என்று பாடியது. அதனைக் கேட்ட தாய் மனம் தேறிப் பகவனுடன் சென்றாள். அக்குழந்தையை வள்ளுவர் என்னும் இனத்திற் பிறந்தவர் ஒருவர் எடுத்து வளர்த்தார். அதனால் அவருக்கும் திருவள்ளுவர் என்று பெயருண்டாயிற்று.

திருவள்ளுவர் அறிவு ஒழுக்கங்களில் சிறந்தவராய் விளங்கினார். அவர் தீதற்ற நெசவுத் தொழிலை நடத்தி வந்தார். செய்யும் தொழிலிலெல்லாம் நெய்யும் தொழில் இனிது' - என்பர். அவர் வாசுகி என்ற பெண்ணை மணந்து கொண்டார். அவர் மாண்புடைய மனைவியாய் இல்லற நெறி வழுவாது ஒழுகினார்.

வள்ளுவர் அரியநூல் ஒன்றை இயற்ற எண்ணினார். அவ்வாறே அவர் அரிய கருத்துக்களைச் சிறிய பாக்களில் அமைத்துப்

பாடினர். அப்பாடல்கள் ஒவ்வொன்றும் இரண்டே அடிகளைக் கொண்டவை. அவை குறட்பாக்கள் எனப்படும். அதனால் திரு வள்ளுவர் இயற்றிய நூலுக்குத் திருக்குறள் என்று பெயர் வழங்கலாயிற்று. திருவள்ளுவர் அந்நூலை மதுரையிலிருந்த கடைச் சங்கத்தில் அரங்கேற்றினர் என்பர். அக்காலத்தில் அங் கிருந்த புலவர்கள் அதன் சிறப்பைக் குறித்து ஒவ்வொரு செய்யுள் பாடினர். அச்செய்யுள் தொகுதிக்குத் திருவள்ளுவ மாலை என்று பெயர்.

திருக்குறள் ஒப்பு உயர்வு இல்லாத தனிப் பெரு நூல். அந்நூல் தமிழர்களுக்கு மட்டும் அல்லாமல் உலக மக்களுக்கே அமைந்த நூலாக உள்ளது. அந்நூல் குறிப்பிட்ட வகுப்பு, சமயம், மரபு, காலம், தேசம் என்பவற்றைச் சாராது யாவர்க்கும் எக்காலத்திற்கும் பொருந்துவதாகப் பொதுவாக அமைந் துள்ளது. அதனால் அதற்குப் பொதுமறை என்ற பெயரும் உண்டு.

பின்னர், திருவள்ளுவர் மயிலாப்பூரை அடைந்து வாழ்ந்து வந்தார். அவருக்கு ஏலேல சிங்கர் என்ற மாணவர் ஒருவர் இருந் தார். அவர் பெருஞ் செல்வர். அவர் திரு வள்ளுவர் சொற்படி அறங்கள் பல செய்தார்.

திருவள்ளுவர் மயிலாப்பூரில் இறந்தார். அவருக்கு அங்கு ஒரு கோயிலும் கட்டப்பட்டது. இன்றும் திருவள்ளுவர் கோயிலை மயிலாப்பூரில் காணலாம். திருவள்ளுவர் சற்றேறக் குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்தவர் ஆவர்.

மாணவர்களே, நீங்கள் சிறுவயதிலிருந்தே திருக்குறளைப் படிக்கத் தொடங்குங்கள்; குறட்பாக்களை மனப்பாடம் செய்யுங்கள்; அந்நூலில் கூறியுள்ளபடி வாழ்வில் நடந்தொழுக முயலுங்கள். அதுவே தமிழர் கடமையாகும்.

அருஞ்சொல் விளக்கம்

ஒழுக்கம் - நடத்தை, மாண்பு - பண்பு, வழுவாது - தவறாமல், இல் - வீடு, இல்லற நெறி - வீட்டு வாழ்க்கையை நடத்தும் முறை. பா - செய்யுள், குறள் - குறுகிய வடிவுடையது.

வினாக்கள்

1. திருவள்ளுவர் பிறப்பைப்பற்றி அறிவது யாது?
2. திருவள்ளுவரின் மனைவி யார்? அந்த அம்மையாரைப்பற்றி அறிவதென்ன ?
3. திருவள்ளுவர் இயற்றிய நூல் யாது? அதற்குள்ள பெயர்களைக் காரணத்தோடு விளக்கு.

இலக்கணம்

தமிழ்ச் சொற்கள் நான்கு வகைப்படும். அவை பெயர், வினை, இடை, உரி என்பன.

1. பெயரைக் குறிப்பது பெயர்ச்சொல் (உ - ம்.) மனிதர், மரம், ஊர், நாள், பொறுமை முதலியன.
2. வினையைக் குறிப்பது வினைச்சொல். (வினை - செயல்) (உ - ம்.) பேசு, உண், கேள், நட, ஓடு முதலியன.
3. இடையே நின்று பொருளைத் தருவது இடைச் சொல். மற்று, உம், ஓ, அந்தோ முதலியன.
4. பெயர், வினைகளின் தன்மையை விளக்குவது உரிச் சொல். (உ - ம்.) சால, உறு, தவ, நனி முதலியன.

பயிற்சி

கோடுகளை நிரப்புக :

திருவள்ளுவர் ஒரு — —.
அவர் — இயற்றினர்.
அவர் — — வழுவாது ஒழுகினர்.
— தொழிலிலெல்லாம் — தொழில் இனிது.
திருக்குறள் — பொதுவான —.
திருவள்ளுவரின் பெற்றோர் — —.



6. கவரி வீசிய காவலன்

முன்னொரு காலத்தில் இரும்பொறை என்னும் சேரன் சேர நாட்டை வஞ்சிமா நகரைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டான். அவன் சிறந்த வீரன்; பெரும் புகழ் படைத்தவன். தமிழ் மொழியை நன்கு கற்றவன். அதனால் அவன் தமிழ் மொழியினிடத்தும் தமிழ்ப் புலவர்களிடத்தும் அளவிலாப் பற்றுக் கொண்டான். அவன் அவையில் மோசிகீரனார், அரிசில்கிழார் போன்ற புலவர்கள் சிறந்து விளங்கினர்.

ஒரு சமயம் மோசிகீரனார் சேரனைக் காண நெடுந் தொலைவிலிருந்து நடந்து வந்தார். நெடுந்தூரம் நடந்து வந்ததனால் அவரது

கால்கள் தள்ளாடின; ஒய்ச்சல் உண்டாயிற்று. அவர் தள்ளாடித் தள்ளாடி அரண்மனைக்குள் நுழைந்தார். அரண்மனையின் முன் மண்டபத்தில் ஒர் அழகிய கட்டில் இருப்பதைக் கண்டார். அது அழகுற அமைந்ததாய், எண்ணெய் நுரை முகந்து வைத்தாற்போல மலர்கள் பரப்பப்பெற்று மென்மையதாய் விளங்கிற்று. அவரால் ஒரடியும் அதற்குமேல் எடுத்து வைக்க இயலவில்லை. புலவர் முரசுக்கட்டிலின் மீதேறிப் படுத்துக்கொண்டார். உடனே அவர் அயர்ந்து தூங்கி விட்டார்.

முரசுக்கட்டில் என்பது மிகத் தூய்மையாக வைக்கப்படுவது. அதனை மிகச் சிறப்பாகப் போற்றுவார். அம்மஞ்சம் தெய்வ பூசை முதலியன செய்விக்கப்பெற்று வழிபடும் தன்மை வாய்ந்தது. அம்மஞ்சத்தை வீரர் வணங்கிப் போருக்குச் செல்வர். வெற்றியை அளிக்கும் வீர முரசு வைக்கப்படும் மஞ்சம் அன்றோ அது! வீரத்தால் பெறும் வெற்றியன்றோ அரசர்க்குப் பெரும் புகழை அழியாது நிலை நிறுத்தும்! அம் முரசுக் கட்டிலில் ஒருவன் ஏறினல் அவன் தலை கொய்யப்படுவதன்றி வேறு ஒறுத்தல் இல்லை. அனைவரும் இதை நன்கு அறிவர் என்றல் புலவர் மட்டும் அறியாதிருப்பாரோ? புலவர் களைப்பின் மிகுதி

யால், செய்வது உணராது அக்கட்டிலின் மீது படுத்துறங்கினர்.

சேரன் அச்சமயம் ஏதோ காரணமாக அவ்வழியே வந்தான். முரசுக் கட்டிலில் யாரோ ஒருவர் ஏறிப்படுத்திருப்பதை அவன் அப்பால் வரும்போதே அறிந்து கொண்டான். மன்ன னுக்குச் சினம் பொங்கியெழுந்தது; வேந்தன் சீறின் ஆம் துணை இல்லையன்றோ? உடனே அவன் தன் உடை வாளை உருவிக்கொண்டான். கடிது நடந்து முரசுக் கட்டிலைக் குறுகினன். முரசுக் கட்டிலை நெருங்கிய காவலன் ஓச்சிய வாளைக் கீழே தணித்தான். வாள் உறைக்குள் புகுந்தது. மன்னன் விரைந்து நடந்து கவரி ஒன்று எடுத்து வந்தான்; அருகில் நின்று புலவருக்குக் கவரி கொண்டு வீசலானன். குளிர்ந்த மெல்லிய காற்று வீசப் புலவரும் ஆழ்ந்து துயின்றார். புலவர் துயிலெழும் வரை புரவலன் கவரி வீசினன்.

கோமான் கவரி வீசத் துயின்ற கோதில் புலவர் சிறிது நேரம் சென்றதும் கண் விழித் தார். பக்கத்தில் பார்த்திபன் கவரி வீசுதலைக் கண்டார். புலவர் உடல் நடுங்கிற்று. விரைந்து கட்டிலினின்றும் இறங்கி மன்னனை வணங்கி நின்றார். வேந்தன் புலவரை நோக்கி "மெய்ப் புலவீர்! அஞ்சாதீர். அமர்வீர்" என்று அருகி

லிருந்த இருக்கையில் அமரச் செய்தான். அந் நிலையில் மோசிகீரனுர், "சேரர் குலச் செம்மலே, அறியாமல் முரசுக் கட்டிலில் ஏறிய என்னைக் கூரிய வாளால் வெட்ட வேண்டியதே முறை. அது செய்யாமல் கவரி கொண்டு வீசிய தன்மையை என்ன சொல்வேன்! நும் தமிழ்ப் பற்று அன்ருே அவ்வாறு செய்யச் செய்தது! உம் தமிழ்ப் பற்றுக்குக் கவரி வீசிய செயல் ஒன்றே போதுமான சான்ருகும்" என்று அரசனது அருமைச் செயலைப் புகழ்ந்தார்.

அருஞ்சொல் விளக்கம்

கவரி - கவரி மான் மயிரினுல் கட்டப்பட்ட விசிறி. வடமொழியில் சாமரம் என்பர். முரசு - இசைக் கருவி; ஒலி முழக்கம் செய்வது; இது தோற் கருவி.

வினுக்கள்

1. இரும்பொறை யார்? அவன் இயல்பு யாது? அவன் காலத்துப் புலவர்கள் யாவர்?
2. முரசுக்கட்டிலில் படுத்திருந்தவர் யார்? அவர் அதில் படுக்கக் காரணம் யாது?
3. முரசுக் கட்டிலின் சிறப்பு யாது?
4. முரசுக் கட்டிலில் ஆளைக் கண்டதும் மன்னன் எவ்வாறு சீற்றம் கொண்டான்? பிறகு அவன் செயல் எவ்வாறு மாறிற்று?

இலக்கணம்

புலவன் — புலவர்கள்	பழம் — பழங்கள்
வீரன் — வீரர்கள்	படம் — படங்கள்
மொழி — மொழிகள்	குதிரை — குதிரைகள்

இவற்றில் முதல் பகுதியில் இருப்பவை ஒரு பொருளை யும், இரண்டாம் பகுதியில் இருப்பவை ஒன்றிற்கு மேற் பட்ட இரண்டு முதலான பொருள்களையும் குறிக்கும்.

ஒரு பொருளைக் குறிப்பது ஒருமை.

இரண்டு முதலாகப் பலவற்றைக் குறிப்பது பன்மை.

பயிற்சி

ஒருமைக்குப் பன்மையும், பன்மைக்கு ஒருமையும் கூறுக.

மனிதன், பிள்ளை, மரம், பற்கள், பழங்கள், ஊர், எங்கள், உன்னை, முள், பசு.

கோடுகளை நிரப்புக :

1. பசு புல் மேய்கிறது. பசுக்கள் புல் ——.
2. —— இங்கே இருக்கிறோம். நான் இங்கே ——.
3. நாய்கள் குரைத்தன. நாய் ——.
4. —— வருவீர்களாக. நீ ——.



7. தீப்பெட்டி

இக்காலத்தில் தீப்பெட்டியை எல்லோரும் பார்த்திருக்கிறீர்கள். மிகக் குறைந்த விலைக்குத் தீப்பெட்டி கிடைக்கிறது. தீப்பெட்டி இருப்பதனால் எப்பொழுது வேண்டுமோ அப்பொழுது தீயை உண்டாக்கிக் கொள்ளலாம். தீப்பெட்டியை எடுத்துச் செல்வதும் எளிதாக உள்ளது. ஒவ்வொருவருக்கும் தினசரி வாழ்க்கைக்குத் தேவையான தீப்பெட்டி ஏராளமாகச் செலவாகுமன்றோ? எனவே, தீப்பெட்டி செய்தல் என்பது ஒரு சிறந்த கைத்தொழிலாகும்.

தீக்குச்சியை எவ்வாறு செய்கிறார்கள் என்பதை நாம் இனி அறிவோம். மனிதன் அறிவால் தேடிக் கண்டறிந்த பொருள்கள் இக்காலத்தில் பல உள்ளன. அவற்றுள் பாஸ்வரம் என்னும் பொருள் ஒன்று. அது மஞ்சள் நிறமுடைய பாஸ்வரம், சிவப்பு நிற முடைய பாஸ்வரம் என்று இருவகை உண்டு. பாஸ்வரம், தானாகப் பற்றிக்கொண்டு எரியும் தன்மையுடையது. ஆதலால், அதனை வெளி யில் வைக்கமாட்டார்கள்; நீரில் போட்டு வைப்பார்கள்.

தீப்பெட்டிக்குள் பல குச்சிகள் இருக் கின்றன. தீப்பெட்டியின் அமைப்பைக் கவனி. மேலே கனச் செவ்வகம் போன்ற கூண்டும், அதற்குள் குச்சிகள் அடுக்கிய அறைப் பெட்டி யும் இருப்பதைக் கவனியுங்கள். தீப்பெட்டி யின் இரு புறங்கள் மூடப்பட்டிருக்கும். மற்ற இரு புறங்கள் மூடப்பட்டிரா. ஒரு புறத்தி லிருந்து உள் அறையைத் தள்ளினால் மற்றொரு புறத்தில் அது வெளிவரும். தீக்குச்சியை எடுத்துக்கொண்டு அதனை உட்புறத்தில் தள்ளி விடலாம்.

தீக்குச்சியும், தீப்பெட்டியும் மிக மென்மை யான சாதிக்காய் பலகையால் செய்யப் பட்டவை. அது எளிதில் நெருப்புப் பற்றக்

கூடிய மரம். நம் நாட்டிலும் அம்மரம் உண்டு. தேவதாரு என்ற மரமும் அத்தகையதே. அம் மரத்தைப் பலகைகளாக அறுத்துப் பின்னர் எந்திரங்களின் உதவியால் தீக்குச்சிக்குரிய குச்சிகளாகவும் தீப்பெட்டிக்குரிய வகையிலும் அறுத்துக் கொள்வார்கள்.

குச்சிகளைத் தயார் செய்துகொண்ட பிறகு வச்சிரம் என்ற பொருளை நீர் சேர்த்துக் காய்ச்சுவார்கள். அது பசைப் பொருள். அது உருகிக் குழம்பாகும் காலத்தில் அதனோடு கந்தகப் பொடியையும் பாஸ்வரம் என்னும் மருந்திற் சிறிதும் சேர்ப்பார்கள். பின்னர், தீக்குச்சிகளின் ஒரு நுனியை ஓரளவாக அக் குழம்பில் தோய்த்து ஆறவைப்பார்கள். குச்சி களில் மருந்து ஒட்டிக் காய்ந்த பிறகு தீப் பெட்டிகளில் அடுக்கிவிடுவார்கள். இக்குச்சி களைச் சொரசொரப்பான இடங்களில் தேய்த் தால் தீ உண்டாகும். பாஸ்வரம் சேர்ந்த குச்சி கள் சில சமயங்களில் தாமேயும் பற்றிக் கொள்ளும். பெட்டிகளில் குச்சிகளை அமைக் கும் போது உராய்வதாலும் தீப்பற்றிக் கொள்ளும்.

இந்த ஆபத்தை அறிந்து இக்காலத்தில் பாஸ்வரம் சேராத குச்சிகளைச் செய்கிறார்கள். பாஸ்வரம் மருந்தைப் பெட்டிகளில் ஒரு பக்

கத்தில் தட்வுகிறார்கள். இத்தகைய குச்சிகளின் நுனியில் இருக்கும் மருந்து கறுப்பு நிற முடையதாக இருக்கும். இக்குச்சிகளைப் பெட்டியின் ஓரத்தில் தேய்த்தால்தான் தீ உண்டாகும். பாஸ்வரம் சேர்ந்த குச்சியின் நுனி செந்நிறமாயிருக்கும்; தரையில் தேய்த்தாலும் தீப்பிடித்துக் கொள்ளும்.

ஐரோப்பாக் கண்டத்தில் நார்வே, சுவீடன் முதலான நாடுகளில் தீப்பெட்டிகள் செய்கிறார்கள். அங்கிருந்து பல நாடுகளுக்கும் தீப்பெட்டிகள் அனுப்பப்படுகின்றன. ஜப்பான் தேசத்திலும் தீப்பெட்டிகள் செய்கிறார்கள். நம்நாட்டிலும் தீப்பெட்டி செய்யும் தொழிற் சாலைகள், பல ஊர்களில் ஏற்பட்டுள்ளன.

தீப்பெட்டியின் மேல் படம் இருப்பதைப் பார்ப்பீர்கள். அதன்மேல் எந்த நாட்டில் செய்யப்படுகிறது என்பதும், அத் தீப்பெட்டிச் சாலையார் வைத்துள்ள பெயரும் காணலாம். தீப்பெட்டிப் படங்களைச் சேகரிப்பது சிறுவர்களுக்கு ஒரு நல்ல விளையாட்டு. அதனால் அவர்கள் எந்தெந்த நாட்டில் தீப்பெட்டி செய்கிறார்கள் என்று அறியலாம்.

அருஞ்சொல் விளக்கம்

கனச் செவ்வகம் - நான்கு நேர் மூலைகளும், நீளம், அகலம் உயரமும் உடைய வடிவம். இதற்குப் பக்கங்கள் ஆறு. கண்டம் - பல தேசங்கள் சேர்ந்த ஒரு பெரிய நிலப்பரப்பு.

வினாக்கள்

1. தீப்பெட்டியினால் விளையும் நன்மைகள் யாவை?
2. பாஸ்வரம் என்பது பற்றி அறிவதென்ன?
3. தீக்குச்சி செய்யும் முறையை விளக்குக.

இலக்கணம்

படி :—

1. நான், யான்	—தன்மை ஒருமை
நாம், நாங்கள், யாம், யாங்கள்	—தன்மைப் பன்மை
2. நீ	—முன்னிலை ஒருமை
நீர், நீங்கள், நீவிர்	—முன்னிலைப் பன்மை
3. அவன், அவள், அது	—படர்க்கை ஒருமை
அவர், அவர்கள், அவை, அவைகள்	—படர்க்கைப் பன்மை

முதலிலிருப்பது தன்னைப் பற்றிப் பேசுவதால்	—தன்மையிடம்
இரண்டாவது முன் நிற்பவனைப் பற்றிப் பேசுவதால்	—முன்னிலையிடம்
மூன்றாவது தன்மை முன்னிலை அல்லாத மூன்றாதவனைப் பற்றிப் பேசுவதால்	—படர்க்கையிடம்

தன்மை, முன்னிலை, படர்க்கை என இடங்கள் மூன்று வகைப்படும்.



8. சித்தன்ன வாசல் சிற்பங்கள்

தமிழகத்தில் பண்டைக் காலத்தில் சிற்ப, ஓவியக் கலைகள் மிகச் சிறந்த நிலையில் இருந்தன. தமிழ் நாட்டில் அக் கலைகளைத் தெளிவுற விளக்கும் இடங்கள் பல உள்ளன. அவற்றுள் சித்தன்ன வாசல் ஒன்று.

சித்தன்ன வாசல் என்பது புதுக் கோட்டைக்குப் பத்து மைல் தொலைவிலும், நாரத்தா மலைக்கு இரண்டு கல் தொலைவிலும் உள்ளது. சித்தன்ன வாசலிலுள்ள மலை மிகச் சிறியது. அம்மலையை அழகின் உறைவிடம் எனலாம். மலையின் மேற்புறத்தில் ஒரு குகைக் கோயில் இருக்கிறது. முன்பு ஒரு மண்டபமும், அதன் பின் சதுர வடிவில்

அமைந்த உள்ளறையையும் கொண்டதே அக் கோயில். அக்கோயிலில் காண்பவற்றை நான்கு வகையாகப் பிரிக்கலாம். அவை (1) நடன மாதர் ஓவியங்கள், (2) அரசன் அரசி ஓவியங்கள், (3) கூரையிலும் தூண் களிலும் உள்ள ஓவியங்கள், (4) உருவச் சிலைகள் என்பன.



நடன மாதர் ஓவியங்கள் : இக்கோயி லின் முன் மண்டபத் தூண்கள் இரண்டில் இரு நடன மாதர் உருவங்கள் அழகாகத் தீட் டப்பட்டுள்ளன. அவற்றுள் வலப் பக்கத்தில் உள்ள சித்திரம் மிக அழகாக நாட்டியம் ஆடும் நிலையில் அமைந்துள்ளது. கைகளில் வளை யல்கள், காப்புகள், விரலில் மோதிரங்கள், வங்கிகள், கழுத்தில் மணி மாலைகள், காது களில் ஓலைகள், கூந்தலில் தாழை மடல்கள்,

திருதுப்பூ முதலியன எல்லாம் காட்டப்பட்டிருக்கின்றன. கைவிரல்களின் மென்மையும் கூர்மையும் உடையன என்பதைக் காட்டுகின்றன. உள்ளங்கை நன்கு புலனுகின்றன. இடப்பக்கம் உள்ள சித்திரம் பின்னும் அழகுள்ளது. இவை இரண்டும் உயிருள்ளவை போல் காட்சி தந்து இன்பமூட்டுகின்றன.

அரசனும் அரசியும்: முன் கூறப்பட்ட தூணின் உட்புறத்தில் ஓர் ஆணும் பெண்ணும் கோயிலுக்குச் செல்வதுபோல் வரையப்பட்டுள்ளன. ஆண் மகன் கழுத்தில் மணிமாலையும், காதில் குண்டலங்களும், தலையில் மகுடமும் அணிந்துள்ளான். பெண் உருவம் அழிந்துள்ளது.

கூரையில் ஓவியம்: முன் மண்டபத்தின் கூரை நடுவில் தாமரைக்குளம் வரையப்பட்டுள்ளது. அதில் தாமரை மலர்களும், மொட்டுகளும், கொடிகளும், இலைகளும் அல்லி, செங்கழுநீர் முதலான மலர்களும், கொடிகளும் தீட்டப்பட்டுள்ளன. அவற்றில் கொடிகள் கூடப் புலப்படும்படி தீட்டப்பட்டுள்ளன. அவற்றின் அழகு வியக்கத்தக்கது. இக் குளத்தில் பலவகை மீன்களும் பறவைகளும் இருப்பன போலவும், யானைகளும் மாடுகளும் நீரைக் கலக்கி விடுவன போலவும்

காட்டப்பட்டுள்ளன. மற்றும் மூவர் உருவங்கள் உள்ளன. அவர்களில் ஒருவர் வலக்கையால் தாமரை கொய்வது போலவும், இடக்கையில் பூக்குடலை ஒன்று தொங்கவிட்டிருப்பது போலவும் தீட்டப்பட்டுள்ளது. மற்ருேர் உருவம் இடக்கையில் தாமரை மலரைக் கொடியுடன் கொண்டிருப்பது போலவும், மற்ருெருகை முத்திரையைக் காட்டுவது போலவும் உள்ளது.

உருவச் சிலைகள் :—முன் மண்டபத்தில் இரு புறங்களிலும் இரண்டு மாடங்கள் உள்ளன. அவற்றுள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சிலை உள்ளது. அச்சிலைகள் யோகத்தில் அமர்ந்த சமணத் துறவிகளைக் காட்டும் உள்ளறையுள் மூன்று சிலைகள் உள்ளன.

ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் நாட்டவர் சிற்ப ஓவியக் கலைகளில் எவ்வளவு தேர்ச்சி பெற்றிருந்தனர் என்பது இதனுல் விளங்கும் அல்லவா?

அருஞ்சொல் விளக்கம்

குகை - குடையப்பட்ட ஓர் உள் வழி. ஓவியம் - சித்திரம். ஓவியம் தமிழ்ச் சொல். சித்திரம் வடமொழிச் சொல். நடனம் - கூத்தாட்டம். இரேகை - கோடு. கோடு தமிழ்ச் சொல். இரேகை வடமொழிச் சொல். குண்டலம் - ஆண்களின் பண்டைக் காலக் காதணி. முத்திரை - குறிப்பிட்ட கருத்தைக் கொண்ட ஓர் அடையாளம்.

வினுக்கள்

1. சித்தன்ன வாசல் எங்கு உள்ளது?
2. அங்குள்ள கோயில் எவ்வாறு அமைந்திருக்கிறது?
3. அங்குள்ள காட்சிகளை என்னென்ன வகைகளாகப் பிரித்துக் கூறலாம்?
4. கூரை ஓவியத்தின் சிறப்பை விளக்கிக் கூறுக.

இலக்கணம்

சித்தன்ன வாசல் புதுக் கோட்டைக்கு —— —— ——. இதில் பல சொற்கள் தொடர்ந்து நிற்கின்றன. பொருள் முடியவில்லை.

சித்தன்னவாசல் புதுக் கோட்டை அருகில் இருக்கிறது. இதில் சொற்கள் தொடர்ந்து நின்று முடிந்த பொருளைத் தருகின்றன.

சொற்கள் பல தொடர்ந்து நின்று, முடிந்த பொருளைத் தந்தால் வாக்கியம் எனப்படும்.

பயிற்சி

கருத்து முடியும்படி ஏற்ற சொற்களைச் சேர்.

நல்லவை செய்ய ......

ஓவியம் கண்களை ......

நான் சித்தன்ன வாசல் ......

ஓவியம் என்பது ......

இது தீட்டியவனுடைய கைவன்மையே ......

கடைக்குச் சென்று ......

வீட்டில் உனக்கு ......



9. உடற் பயிற்சி

இவ்வுலகில் அடைவதற்கு அரிய பிறவி மானிடப் பிறவி. 'அரிது அரிது மானிடர் ஆதல் அரிது' என்பர் பெரியோர். இப்பிறவி யில் நாம் செய்யக்கூடிய நற்காரியங்கள் பல. அவைகளைச் செய்வதற்கு உடலுறுதி வேண் டும். சுவரை வைத்துக் கொண்டல்லவோ சித்திரம் எழுதவேண்டும்!

மக்கள் யாவரும் இன்பமாக வாழ விரும்பு கிறார்கள் அல்லவா? இன்ப வாழ்விற்கு முக்கிய மாக வேண்டுவது உடல் வலிமையாகும். இளமை முதல் உடல் நலத்திற்கு ஆனவற் றைத் தேடிக் கொள்ளவேண்டுவது ஒவ்வொரு

வருடைய கடமையாகும். ஏனெனில், இளமைப் பருவத்தில் உடல் வளர்ச்சி அடைகிறது; வலிமை பெறுகிறது; ஆதலால் இளமைப் பருவத்தில் அமையும் உடற்கட்டு வாழுளில் நீடுநாள் நீடித்து நிற்கும்.

தேகப்பயிற்சி, தேகாப்பியாசம், உடற் பயிற்சி என்பன ஒரு பொருளைத் தருவன. பள்ளிக் கூடங்களில் சிறுவர்களுக்குத் தேகப் பயிற்சி அளித்து வருகின்றனர். உடற் பயிற்சியை விடாமல் முறையாகச் செய்து வந்தால் எலும்புகளும், நரம்புகளும், தசைகளும் உறுதிப்படுகின்றன. தேகத்திற்குச் சுறுசுறுப்பும், எக்காரியத்தையும் செய்யவல்ல திறமையும், மனத்திற்கு உற்சாகமும் உண்டாகின்றன. அம்மட்டோ? அசுத்தநீர் வேர்வையாகக் கழிவதால் நோய் நீங்குகிறது; நல்ல பசி உண்டாகிறது; உண்ட உணவு செரிக்கிறது. உடலில் நல்ல இரத்தம் விருத்தியாகிறது; அதனுல் பலம் உண்டாகிறது.

உடற் பயிற்சி பலவகைப்படும். பஸ்கி, தண்டால், பார் விளையாடல் முதலியன ஒரு வகை. ஓடுதல், நீந்துதல் முதலியன ஒரு வகை. மல்யுத்தம், குதிரைச்சவாரி, நெடுவழி நடத்தல் முதலியன ஒருவகை. இன்னும்

உறுப்புக்களை அசைத்துப் பயிற்சி அளிக்கக் கூடிய பயிற்சிகளும் உள்ளன.

உடற் பயிற்சியை ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் செய்தல் வேண்டும். உடற்பயிற்சி செய்யும் இடம் பரந்த வெளியாக இருக்கவேண்டும். காற்று இல்லாத இடங்களும் உடற்பயிற்சி செய்வதற்குரிய இடங்கள் ஆகா. தூய்மையான காற்றும் நல்ல வெளிச்சமும் உடற் பயிற்சி செய்வோர் உடலுக்கு நல்ல பயனை அளிப்பனவாகும். உடற் பயிற்சியை ஒவ்வொரு நாளும் குறித்த காலத்தில் செய் து வருதல் வேண்டும். உடற் பயிற்சி செய்வோர் உணவு வகையிலும் ஒழுங்குடையவர்களாக இருக்க வேண்டும். நல்ல தூய உணவை அளவோடும் காலத்திலும் உண்ண வேண்டும்.

உடற் பயிற்சியினல் உடல் வலிமை அடைவதோடு மனமும் தெளிவு அடைகிறது. உடற் பயிற்சி செய்பவரிடம் பல நற்குணங்கள் நிரம்பியிருத்தலைக் காணலாம். உடற் பயிற்சி செய்பவனிடம் சோம்பல் இராது; அவன் தேகம் சுறு சுறுப்பாக இருக்கும். அவன் மனமும் தூய்மை உடையதாய், தீய குணங்கள் இன்றி நற்குணங்கள் நிரம்பித் தெளிவாகவும் உற்சாகமாகவும் இருக்கும். நல்லெண்ணங்

களே உள்ளத்தில் தோன்றும். உள்ளக் கிளர்ச்சியும், பொறுமையும், கூரிய அறிவும் அவனிடம் உண்டாகும். எத்தகைய துன்பம் நேர்ந்தாலும் அவன் உள்ளம் சலிப்படையாது. மற்றும், உடற் பயிற்சி செய்பவன் கட்டழ கோடு காணப்படுவான். அவனிடம் எவற் றிலும் ஒழுங்கு அமைந்திருக்கும். அவன் துணிவு உடையவனுகவும் இருப்பான்.

மாணவர்களே, நோயற்ற வாழ்வே குறை வற்ற செல்வம். ஆதலால், நீங்கள் எல்லோ ரும் உடல் ஓம்பலில் கருத்தூன்ற வேண்டும். உடல் நலமும் இருந்தால் பாடங்களையும் செவ்வையாகப் படிக்க முடியும். இளமைப் பருவம் முதலே தேகப் பயிற்சியை இடை விடாது செய்து பழகவேண்டும். அதனுல் உடல் வலிமையும் கட்டழகும் வாய்ந்து சிங்கக் குட்டிகள் போல் விளங்க வேண்டும்.

உடல் வலிமை பெற்ருல், உள்ளமும் வலிமை பெறும் ; மகிழ்ச்சியாக வாழலாம்.

அருஞ்சொல் விளக்கம்

1. வாணுள் - வாழ்நாள், அப்பியாசம் - பயிற்சி, கட்டழகு - உடலுறுப்புக்களின் உறுதியும் அமைப்பும் கூடிய தோற்றம், கடமை - தவருமல் செய்யவேண்டியது, ஓம்பல் - பேணுதல், பாதுகாத்து வளர்த்தல்.


வினாக்கள்

1. நாம் நம் உடலை ஏன் ஓம்பவேண்டும்?
2. உடற்பயிற்சியில் பலவகைகள் யாவை?
3. உடற்பயிற்சியால் உண்டாகும் நன்மைகள் யாவை?
4. குறைவற்ற செல்வம் எது?

இலக்கணம்

கவனி: வினைச் சொற்களுக்கு மூன்று காலங்கள் உண்டு. அவை இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் அல்லது வருங்காலம் என்பன.

இறந்தகாலம்	நிகழ்காலம்	எதிர்காலம்
(முன் நடந்தது)	(இப்போது நடப்பது)	(இனிமேல் நடக்கப்போவது)
செய்தான்	செய்கிறான்	செய்வான்
செய்தேன்	செய்கிறேன்	செய்வேன்



10. மதுரை

மதுரை தமிழ் நாட்டின் நடுவே அமைந்துள்ள ஒரு மாநகரம். பண்டைப் பாண்டி நாட்டின் தலைநகரமாக விளங்கிய பழம்பதி. தமிழன்னை வளர்க்கப்பெற்ற இடம். ஆகவே அவ்வூரைப் பார்க்கவேண்டுமென்று விரும்பினேம். நாங்கள் இருபது மாணவர்களும் இரண்டு ஆசிரியர்களுமாக வெள்ளிக்கிழமை இரவு திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் (விரைவு வண்டியில்) ஏறினேம்; சனிக்கிழமை காலை எட்டு மணிக்கு முன்பே மதுரையை அடைந்தோம். நாங்கள் தங்குவதற்கு, சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் முன்னமே ஏற்பாடு செய்து கொண்டிருந்தோம். உணவருந்தல்,

நீராடல் போன்ற அன்றாட வேலைகளைப் பற்றி இப்போது நாங்கள் விவரிக்கவில்லை. மதுரை யில் நாங்கள் களி கூர்ந்து கண்ட சிறப்புக் களை மட்டும் கூறுகிறோம்.

மதுரையின் அமைப்பே அமைப்பு ! மனை யடி நூலையொட்டி வீடுகளைக் கட்டுவது நம் முடைய தொன்று தொட்ட முறையல்லவா ? அதுபோலவே ஊர் அமைப்பு முறையைத் தழுவி மன்னரால் உண்டாக்கப்பட்ட ஊரன்றோ மதுரை ! இவ்வூருக்கு முதற் பெருமை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில். அம்மையைக் கண்டு கொண்டு, அப்பரைக் காண்பது அவ்வூர் வழக்காம். ஆகவே நாங்கள் முதலில் வைகை யாற்றில் நீராடிவிட்டு மீனாட்சி அம்மன் கோயிலுக்குச் சென்றோம். அம்மா! எவ்வளவு பெரிய கோயில்! வேலைப்பாடு அமைந்த கோபுரங்கள் உயர்ந்து நாற்புற வாயில்களிலும் விளங்கின. அதன் மதில் சுவர்கள் மிகவும் உயரமானவை. உள்ளே பல சுற்றுக் கோயில் கள் இருந்தன. கோயிலுக்குள் அகன்ற மண்டபங்கள் அழகாக விளங்கின. அங்குப் பொற்றாமரைக் குளத்தையும் பார்த்தோம்.

கோயில் தூண்களிலும், விமானங் களிலும், கோபுரங்களிலும் கண்களைக் கவரும் சிற்பங்களும், சித்திரங்களும் விளங்கு

கின்றன. இடதுகாலைத் தூக்கி ஆடும் நடராசரைக் கண்டு வணங்கினோம். மீனாட்சியம்மையைக் கண்டோம். சோமசுந்தரர் ஆலயத்திற்குள் புகுந்தோம். எங்கும் சிற்பங்கள்; எங்கள் கண்களைக் கவர்ந்தன. நெடு நேரம் கோயிலைச் சுற்றிப் பார்த்தோம். பின் சோமசுந்தரரையும் தரிசித்துவிட்டு வெளி வந்தோம். அங்குப் புது மண்டபத்தையும், வசந்த மண்டபத்தையும் பார்த்தோம். அங்குக் கண்ட சிற்பங்களும், ஓவியங்களும் இன்னும் எங்கள் கண்களை விட்டு அகலவில்லை.

மதுரை சதுரமாய் அமைந்த நகர். அதற்கு ஆலவாய், நான்மாடக்கூடல், கன்னியாபுரம், துவாதசாந்தபுரம் என்னும் பெயர்கள் உண்டு. அதனைத் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்திகள், மாணிக்கவாசகர், திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர் முதலியோர் பாடியிருக்கிறார்கள். அந்நகரில் சிவபெருமான் அறுபத்து நான்கு திருவிளையாடல்களைச் செய்திருக்கிறார்.

மதுரையில் தமிழ்ச் சங்கம் இருந்தது. பல புலவர்கள் சங்கத்திலிருந்து தமிழ் ஆராய்ந்தார்கள். பல நூல்கள் இயற்றினார்கள். அவை சங்க நூல்கள் எனப்படும். 'சங்கத் தமிழ் மூன்றும் தா' என்று படித்திருக்

கிரேமல்லவா? பாண்டியர்களுக்குப் பின் ஆண்டுவந்த நாயக்க மன்னர்களும் மதுரையையே தலைநகராகக் கொண்டார்கள். அவர்களுள் திருமலை நாயக்கரும், இராணி மங்கம்மாளும் சிறந்தவர் ஆவார் என எங்கள் ஆசிரியர் கூறினர்.

அடுத்தபடியாக எங்கள் ஆசிரியர் எங்களை வண்டியூர்த் தெப்பக் குளத்திற்கு அழைத்துச் சென்றனர். தெப்பக்குளமும் நடுவில் இருந்த கல்மண்டபமும், சுற்றிலும் சோலைகளும் எங்களுக்கு இன்பமூட்டின. பிறகு கடைத் தெருக்களைச் சுற்றிப் பார்த்தோம். மதுரை வர்த்தகச் சிறப்புடைய ஊர் அல்லவா?

திருமலை நாயக்கர் மகாலைச் சென்று கண்டோம். சுவர்க்க விலாசம் என்ற வாயிலும், வில் மண்டபங்களில் காணப்பெற்ற உருவங்களும், உட்புறத்தில் காணப்பெற்ற வளைவுகளும் சிறந்த வேலைப்பாடு கொண்டவை. அம்மகாலைச் சுற்றிப் பார்த்தோம். அதன் நடுவில் கருங்கல் மண்டபம் ஒன்றிருந்தது. அதனிடத்தில் தந்தத்தால் ஆகிய அறை ஒன்றும், அதனுள் இரத்தினங்கள் இழைத்துச் செய்யப்பெற்ற சிங்காதனம் ஒன்றும் இருந்தனவென்று கூறினர்.

மதுரை நெசவிற்கும், சாயமேற்றும் தொழிலுக்கும் பெயர் பெற்றது. புடவை, வேட்டி வியாபாரம் ஏராளமாக நடைபெறு கிறது.

கல்லூரிகளும், உயர்நிலைப் பள்ளிகளும், பல தொடக்கப் பள்ளிகளும், தமிழ்ச் சங்கக் கல்லூரியும் நடைபெறுகின்றன. ஆகவே கல்வி வளர்ச்சிக்கும் சிறப்புடையது மதுரை.

பெரிய பஞ்சாலையும் மதுரையில் நடை பெறுகிறது. இவ்வாலையைப்பற்றி அடிக்கடி செய்தித் தாள்களிலும் படிக்கிறோம் அல்லவா ?

எங்கள் இன்பச் செலவு இனிமையாக முடிந்தது. ஞாயிறு ஆறரை மணிக்கு இரயிலேறி, திங்கள் காலையில் எழும்பூர் வந்து விட்டோம்.

இந்து உயர்நிலைப்பள்ளி மாணவர்கள்
திருவல்லிக்கேணி

அருஞ்சொல் விளக்கம்

மீனாட்சி - வடமொழிச் சொல். அங்கயற்கண்ணி - தமிழ்ச் சொல்; மீனைப்போன்ற கண்களை உடையவள் என்பது பொருள். தரிசித்தல் - வடமொழிச் சொல். காணல் - தமிழ்ச் சொல். இறைவனையும், பெரியோரை யும் காண்பதைத் தரிசித்தல் என்பர்.

வினாக்கள்

1. மதுரையின் பழஞ் சிறப்பு யாது?
2. மதுரையில் காணத்தகும் இடங்கள் யாவை?
3. மாணவர்கள் திருமலை நாயக்கர் மகாலில் கண்ட காட்சிகள் யாவை?
4. எத்தொழில்களுக்கு மதுரை பெயர் பெற்றது?

இலக்கணம்

கவனி :

பெயருக்கேற்றபடி வினையும் ஒருமை, பன்மை, இடம் இவைகளில் ஒத்துவரவேண்டும்.

நான் வருகிறேன்.	அவன் வருகிறான்.
நாங்கள் வருகிறோம்.	அவள் வருகிறாள்.
நீ வருகிறாய்.	அவர்கள் வருகிறார்கள்.
நீங்கள் வருகிறீர்கள்.	அது வருகிறது.
	அவைகள் வருகின்றன.



11. ஔவை தூது

[நாடகம்]

அங்கம் 1

இடம் : தகடூர் அரண்மனை.

காலம் : காலை.

உறுப்பினர்கள் : அதிகமான், நெடுமான்—அஞ்சி, ஔவை, சேவகர்.

சேவகன் : (அதிகமானைப் பணிந்து) மன்ன, வணக்கம். நின்வெற்றி ஓங்குக! வீரம் விளங்குக! கொற்றம் வாழ்க! நம் அரண்மனை வாயிலில் அருந்தமிழ் மூதாட்டி ஔவைப் பிராட்டியார் வந்துள்ளார்.

அதிகமான் : ஔவையாரா ! உள்ளே அழைத்து வருக. காலம் தாழ்த்தாதே ; விரைந்து செல்.

(சேவகன் வணங்கிச் செல்லுதல். ஔவையோடு வருதல்.)

அதிகமான் : அம்மையே, வருக வருக. தாங்கள் நெடுநாட்களாய் இங்கு வரவில்லையே ; எங்குச் சென்றீர் ?

ஔவை : நான் சிறிது காலம் சோழ நாட்டிலும், சிறிது காலம் பாண்டிய நாட்டிலும் இருந்து வரலாம் என்று சென்றேன்.

அதிகமான் : இப்பொழுதாவது என்னை நினைவிற்கொண்டு வந்தது மகிழ்ச்சியை அளிக்கின்றது.

சேவகா, விரைந்து சென்று காலையில் கொணர்ந்த பழத்தை எடுத்துவா.

(சேவகன் பழத்தைக் கொண்டுவந்து கொடுக்க)

அம்மையே இந்தப் பழத்தைப் புசியுங்கள்.

(ஔவை கரு நெல்லிக்கனியை உண்டு)

ஔவை : மன்ன, இப்பழம் மிகவும் சுவையாயிருக்கிறது. இது ஏது ?

அதிகமான் : தாயே, நான் வேட்டை யாடச் சென்றேன். வேட்டையாடிய பின்

ஒரு சுனையை அடைந்தேன். அங்கு ஒரு முனிவர் இருந்தார். "அவர் எனக்கு ஒரு பள்ளத்தாக்கைக் காட்டி, அங்குப் புதர்களின் நடுவில் ஒரு நெல்லிமரம் நிற்கின்றது. அதன் கனி பல ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒன்று தான் பழுக்கும். அதனை உண்டால் நீண்ட காலம் வாழலாம்'' என்றார். அதனைப் பறித்துக்கொண்டு வந்தேன். நீர் வந்தீர், உமக்குக் கொடுத்தேன்.

ஔவை : அதனை நீ உண்ணாது எனக்கு அளித்தாயே. நீ மன்னன்; மற்றும் கொடை வள்ளல். நீ நெடுங்காலம் வாழ்ந்திருந்தால் எவ்வளவு மக்கள் உன்னால் நலம் அடைவர்! சாகப்போகும் கிழமாகிய நான் இருந்து யாருக்கு என்ன பயன்! அமிர்தம் போன்று ஆயுளை வளர்க்கும் நெல்லிக்கனியை எனக்குக் கொடுத்தது ஒன்றே உன் தமிழ்ப் பற்றை நன்கு விளக்குகின்றது.

அதிகமான் : தாயே, நான் இருந்து என்ன பயன்! நான் என்னிடம் வருவோர்க்கு வேண்டுவன அளிக்கின்றேன் என்கிறீர்; உண்மை; ஆனால் நான் அளிக்கும் செல்வப் பொருள் அழியத்தக்கது; சிறிது காலமே பயன் தருவது; ஓரிடத்தும் நில்லாதது. ஆனால் தாங்கள் அளிக்கும் கல்விப் பொருளோ

என்றும் அழியாதது; எக்காலத்தும் பயன் தருவது. நான் அளிக்கும் பொருள் தீயவழி யில் புகுத்தினும் புகுத்தும்; பழி பாவங்களை உண்டாக்குதலும் கூடும்; ஆனல் தாங்கள் அளிக்கும் கல்விப் பொருள் நல்வழியிற் செலுத்தும்; அழியாப் புகழை உண்டாக்கும். ஆதலால் என்னினும் தாங்களே அக்கனியை உண்ணத்தக்கவர் என்பது எளிதில் விளங்கு கிறதன்றோ?

ஔவை : நின் அன்பும், கொடையும் இவ்வுலகில் யாவர்க்கு உண்டு! நீ நீடு வாழ்க!

அங்கம் 2

இடம் : தொண்டை நாட்டுக் காஞ்சீபுரத்து—அரண்மனை.

காலம் : காலை.

உறுப்பினர்கள் : தொண்டை நாட்டரசன், ஔவை, சேவகர்.

[சேவகன் ஓடிவந்து மன்னனை வணங்கி அரண்மனை வாயிலில் ஔவையார் வந்துள்ளதை அறிவித்தல்; மன்னன் அனுமதிக்க ஔவையார் உள்ளே போதல்.]

தொண்டை நாட்டரசன் : ஏது இவ் வளவு தூரம்! தங்கள் வருகை அத்தி பூத் தது போலன்றோ இருக்கிறது!

ஔவை : நான் சில மாதங்களாகப் பல தலங்களுக்கும் சென்று வருகிறேன். காஞ்சீ புரமும் உன் நினைவும் வர இங்கு வந்தேன்.

தொண்டை நாட்டரசன் : அவ்வள வேனும் என் நினைவு இருந்ததற்கு மகிழ் கிறேன். சில நாட்களேனும் இங்கு தாங்கள் தங்கியிருக்க வேண்டுகிறேன்.

ஔவை : அப்படியே. இப்பொழுது எங்கோ வெளியில் புறப்படுவது போல் தோன்றுகிறதே.

தொண்டை நாட்டரசன் : ஆம் ஆயுத சாலையைப் பார்த்துவரச் செல்கிறேன். புலி யின் வலிமை அறியாது முயல் எதிர்ப்பது போல், என் வலிமை அறியாது தகடூர் அதிக மான் என்னை எதிர்த்துப் போருக்கு வருகி ருன். வாருங்கள் ஆயுதக் கொட்டிலைச் சென்று காண்போம்.

ஔவை : அப்படியே.

(இருவரும் ஆயுதசாலையில் புகுந்து வருகின்றனர்)

தொண்டை நாட்டரசன் : என் ஆயு தங்கள் எவ்வாறு விளங்குகின்றன? எவ்வளவு சிறப்பாகப் போற்றுகிறேன் தெரியுமா?

ஔவை : ஆம், காண்கின்றேன். நீ சிறந்த ஆயுதங்களை நல்ல முறையில் நிரம்ப

வைத்துள்ளாய். அவையெல்லாம் கண்களைக் கூசும் ஒளி வீசுகின்றன; உறை போடப் பட்டு உள்ளன; நெய் பூசப்பட்டுள்ளன; கைப்பிடிகள் கழலாமல் உறுதியாய் அழகுற அமைந்துள்ளன. அவற்றிற்குப் பீலியும் பூமாலைகளும் சூட்டப்பட்டுள்ளன. அவை கெடா வண்ணம் அமைத்துக் காக்கும் உன் முயற்சி வியத்தற்குரியதே. மன்ன, உண் மையைச் சொல்லுகிறேன். அதிகனை நான் நன்கறிவேன் அல்லவா? அவன் ஆயுத சாலை யையும் அறிவேன். அவன் ஆயுதசாலையில் இவ்வளவு அழகாக ஆயுதங்கள் இல்லை. அவை முனை மழுங்கியும், ஒடிந்தும், வளைந்தும், பிடி கழன்றும், நெய்பூசுதல் அறியாதவையாய் உள்ளன. அவற்றில் இரத்தக்கறையும், நிண மும் உள்ளன. பெரும்பாலான ஆயுதங்கள் கொல்லன் உலைக்களத்தே ஒடிந்து கிடக் கின்றன.

தொண்டை நாட்டரசன்: அன்னையே, உம் கருத்தை அறிந்தேன். என் ஆயுதங்கள் வேலையில்லாமையால் ஒழுங்காக ஆயுத சாலை யில் அலங்காரமாக உள்ளன. அதிகன் ஆயு தங்கள் பல போர்களில் பயன்படுத்தப்பட்ட மையால் பழுதுற்றுள்ளன என்று கூறுகின்றீர். இதனை நான் அறிந்தேன். இதனால் என்னைப்


போரே செய்யாதவன் என்றும், அதிகன் போர் புரிந்து பழகியவன் என்பதுமன்ரோ நீங்கள் குறித்தது? அதிகனின் போர்த்திறனை உங்கள் வாய்மொழியால் அறிந்தேன். இனிப் போர் செய்யேன். அதிகனைச் சகோதரன்போல் பாவித்து ஒழுகுவேன். இன்றே அதிகனிடம் தூதனை அனுப்புகிறேன். வாருங்கள் அரண் மனைக்குச் செல்லலாம்.

ஔவை: அதுவே செய்யத் தகுந்த செயல். போர் எதற்கு? போரால் விளையும் தீமைகளை எண்ணிப்பார். எவ்வளவு பொருள் கள் அழியும்? ஆட்கள் அழிவர்? குதிரை, யானை முதலியன அழியும்? பகை பெருகும்? மன்ன, நீடு வாழ்க!

(இருவரும் அரண்மனைக்குச் செல்கின்றனர்.)

பயிற்சி

இதில் வரும் கதைகளை உரைநடையில் கூறு.



12. மான்கள்

மான் ஓர் அழகான விலங்கு. இவ் விலங்கு நாட்டை யடுத்துள்ள சிறு மலேகளி லும், காடுகளிலும் காணப்படும்; இவ்விலங்கு இறைச்சியைத் தின்னுது; புற்களே மேயும்; அசைபோடும். அறுகம்புல்லேத் தின்பதில் இவ்விலங்கிற்கு மிகவும் விருப்பம்.

மான்களில் பல வகை உண்டு. கொம்பு கிளேகளாகப் பிரிந்த ஒருவகை மானும், திருகலாக அமைந்த ஒருவகை மானும் உண்டு. ஆண் மானிற்குக் கொம்பு உண்டு. பெண் மானிற்குக் கொம்பு இல்லே. மான்களில் ஒரு

சிலவற்றிற்கு உடலில் வெண்மையான புள்ளிகள் இருக்கும். அவற்றைப் 'புள்ளிமான்கள்' என்று கூறுவர்.

மான்கள் கூட்டங் கூட்டமாகக் காடுகளில் வசிக்கும். மான்கள் மிக வேகமாய் ஓடும். அதன் குளம்பு இரு பிளவினதாகவும், வலிமை வாய்ந்ததாகவும் இருக்கும். அவைகள் கற்களின்மேல் தாவிக் குதிக்கும்பொழுது வெண்கலம் போல் ஓசை உண்டாகும். மான்கள் காடுகளில் புதர்களிடையே மறைந்து வசிக்கும். மான் புல்லைத் தின்னும் விலங்காதலின் அதற்குப் 'புல்வாய்' என்ற பெயரும் உண்டு.

மான்களில் கடமை என்ற ஒருவகை உண்டு. அது மிகவும் முரட்டுத்தன முடையது. பொதுவாக மான்கள் சாதுவான பிராணி.

மான்தோலை இருக்கை விரிப்பாக கொள்வார். அத்தோலினால் பைகளும், இடுப்பு வார் எனும் கச்சையும் தைப்பார்கள். சிலர் மான் இறைச்சியைப் புசிப்பார்கள். மான் கொம்பு மருந்துக்கு உதவும். மான்களைப் பிடித்து மக்கள் வீடுகளில் அழகுக்காக வளர்ப்பதும் உண்டு.

இரஷ்யா, சுவீடன், நார்வே முதலான குளிர்ந்த தேசங்களில் கலைமான்கள் மிகுதி.

அந்தக் குளிர் மிகுந்த தேசமக்களுக்கு அக் கலைமான்கள் பலவகையிலும் பயன்படுகின் றன. இலாப்லாந்து என்ற தேசத்தில் உள்ள கலைமான்களின் காலில் மூன்று குளம்புகள் உள்ளன. அவை உடலில் அடர்ந்த மயிர் உடையனவாகவும், நான்கு ஐந்து அடிவரை வளர்ந்த கொம்புகளை உடையனவாகவும் இருக்கும். அதன் குளம்புகள் பூமியில் புதைவ தில்லை. அவை அந்நாட்டில் பொதி சுமக்க வும், படகு போன்ற சக்கரம் இல்லாத வண் டியை இழுக்கவும் பயன்படுகின்றன. கலை மானின் பாலைக் குடிப்பார்கள். அதன் கொழுப்பிலிருந்து ஒருவகை எண்ணெய் எடுப்பார்கள். அதன் தோல் ஆடையாகவும், கூடாரத்திற்கு மேலே கூரைபோல் போடவும் பயன்படுகிறது. அதன் நரம்புகளை முறுக் கிக் கயிறு திரிப்பார்கள்.

கத்தூரிமான் என்ற ஒருவகை மான் உண்டு. அதனிடத்திலிருந்துதான் நமக்குக் கத்தூரி என்னும் பொருள் கிடைக்கிறது. அது ஆசியாக் கண்டத்தின் நடுப் பகுதியி லும், கீழ்ப்பகுதியிலும், காஷ்மீர் தேசத்திலும் காணப்படுகிறது. கத்தூரி மான் இருபது அங்குல உயரமே உள்ளது. இதற்கு அடி வயிற்றினுள் பித்தப்பையுண்டு. மற்ற மான்

களுக்கு அது இல்லை. கத்தூரி மான் ஆணை யினும் பெண்ணையினும் கொம்புகள் பெற்றிரா. ஆனால் ஆண் மானுக்கு மேல்வாயில் இருபுறங் களிலும் கோரைப் பற்கள் உண்டு. அது செங்குத்தான இடங்களில் விரைவாகத் தாவிச் செல்லும். அதன் காதுகள் பெரியன; வால் குறுகியது. அதன் உடம்பிலுள்ள நீண்ட மயிர்கள் ஒடியத் தக்கன. அதன் உடம்பு மஞ்சளாகவோ செம்மை கலந்த தவிட்டு நிற மாகவோ இருக்கும். அதன் அடிவயிறு சிறிது வெண்மையாக இருக்கும். அவை களுக்கு மங்கலான புள்ளிகளும் இருக்கும்.

கத்தூரி மான்கள் கூட்டமாய்த் திரியா. தனிமையாகவோ, அல்லது ஆணும் பெண்ணு மாகவோ திரியும். அவை இரவில் மேயும்; பகலில் புதரில் மறைந்திருக்கும். அவை புல், பாசி, இலை முதலியவற்றைத் தின்னும். கத்தூரி மானுக்கு அடிவயிற்றில் ஒரு பை உண்டு. அதில் சிறு துவாரமுண்டு. வேண் டும் பொழுது அது அதனையழுத்தி அம் மணத்தை வெளிப்படுத்தும். அம் மணத்தால் பெண்மான்கள் ஆண்மான்களின் இருப் பிடத்தை அறிந்து செல்லும். கத்தூரிக்காக அம் மானை வேடர்கள் வேட்டையாடுவர். கத்தூரி காரமாக இருக்கும். அது சிறிது

கசப்புச் சுவை உடையது. கத்தூரி மருந்துக்கு உதவுகிறது. குழந்தைகளுக்குக் கத்தூரி மாத்திரிரை கொடுக்கிருர்கள் அல்லவா? கத்தூரி அருமையாகக் கிடைப்பதால் மிகவும் விலயுயர்ந்த பொருளாகும்.

கவரிமான் என்ற ஒருவகை மான் உண்டு. அதன் உடலிலும் வாலிலும் அடர்ந்து நீண்ட மயிருண்டு. அம்மயிரைக் கொண்டு சாமரங்கள் செய்யப்படுகின்றன. கவரிமான் மிக்க மானமுடையது. தன் உடலினின்று ஒரு மயிர் நீங்கிஞலும் அது உயிர் விட்டுவிடுமாம். மானே அழகுக்காக வீடுகளில் வளர்ப்பது உண்டு.

அருஞ்சொல் விளக்கம்


இருக்கை - உட்காருவதற்காகப் பயன்படும் பலகை முதலியன, (ஆசனம்) எள்+நெய்=எண்ணெய், ஆயினும் கடலே எண்ணெய், தேங்காய் எண்ணெய் என எல்லா நெய்க்கும் வழக்கில் சொல்லப்படும்.

விஞக்கள்

1. மானில் பலவகைகள் யாவை?
2. மானிஞல் மனிதர்க்கு என்ன பயன்?
3. கத்தூரி என்பது என்ன? அது எவ்வாறு கிடைக்கிறது?

பயிற்சி

மான் அல்லது வேருெரு விலங்கைப்பற்றி ஒரு கட்டுரை எழுது.



13. நிலக்கரியும் மண்ணெண்ணெயும்

நிலக்கரி: நிலக்கரி நிலத்திலிருந்து தோண்டி யெடுக்கப்படுவதால் அப்பெயர் பெற்றது. நிலத்தில் மிகுந்த ஆழமான அடிப்பாகத்தில் பாறை பாறையாக இருக்கும். சுரங்கம் தோண்டி நிலக்கரியைப் பாறை பாறையாக வெளியே எடுப்பார்கள்.

நிலக்கரி எப்படி உண்டாகிறது? இக்காலத்தில் நிலக்கரி கிடைக்கும் இடங்கள் எல்லாம் முன்னொரு காலத்தில் பெருங் காடாக இருந்திருக்க வேண்டும். அங்கு மரங்கள் மிகுந்து வளர்ந்திருக்க வேண்டும். அவற்றை

வெட்டிக்கொண்டு செல்வார் இல்லாமையால் அங்கங்கே பட்டு வீழ்ந்து பூமியில் மடிந்து புதைந்திருக்க வேண்டும். காலம் செல்லச் செல்ல மரங்கள்மேல் மரங்களாக வீழ்ந்து மடிந்து பூமியில் மண்ணுல் புதையுற்றிருக்க வேண்டும்.

பூமியின் அடிப்பாகம் மிகவும் வெப்ப மானது. பூமியில் புதையுண்ட மரங்கள் பூமி யின் அழுத்தும் சக்தியினுல் இறுகிவிடும்; பூமியின் வெப்பத்தினுல் கருகிவிடும். கருகிய அவை கரிப் பாறைகளாய் அடுக்கடுக்காய் அமைகின்றன. மண்ணடுக்குகள் மேலும், கரிப்பாறை அடுக்குகள் கீழுமாக அமைகின் றன. இவ்வாறு அமைதற்குப் பல நூற்றுண்டு கள் ஆகலாம். இத்தகைமையாகப் பல நூற் றுண்டுகளாக அமைந்த கரிப்பாறைகள் அமைந்த இடங்களே நிலக்கரி உள்ள இடங் களாகும். மக்கள் சுரங்கங்கள் தோண்டி அவற்றை வெட்டி எடுப்பர்.

நிலக்கரி புகை வண்டிக்கும், கப்பலுக் கும், தொழிற்சாலைகளுக்கும் மிக்க உதவியாவ தோடு வீடுகளில் அடுப்பெரிக்கவும் உதவும். ஆனுல் நிலக்கரியில் வெப்பம் அதிகமாதலால் பாத்திரங்கள் சீக்கிரம் ஓட்டையாகிவிடும்.

இந்தியாவில் பலவிடங்களில் நிலக்கரிச் சுரங் கங்கள் இருக்கின்றன.

மண்ணெண்ணெய்: இது மண்ணி லிருந்து கிடைக்கப் பெறுவதால் மண்ணெண் ணெய் என்ற பெயர் உண்டாயிற்று. இதனைக் கிரோஸின் என்றும், சீமை எண்ணெய் என் றும் கூறுவர். நிலக்கரி கிடைக்கும் இடங் களில் எல்லாம் மண்ணெண்ணெய் கிடைக் கும். பூமியில் மரங்கள் புதையுண்டு கரியா கின்றன என்று முன் அறிந்தோம் அல்லவா? அம்மரங்களிலிருந்து ஒருவகை எண்ணெய் கசிந்து வெளிவரும். அந்த எண்ணெய் ஏராள மாகப் பூமியினடியில் தேங்கி நிற்கும். அங்குக் கிணறுகள் தோண்டி அந்த எண்ணெயை எடுப்பார்கள்.

மண்ணெண்ணெய் மற்ற எண்ணெய் களைப் போலத் தடிப்பானதன்று. அது தண் ணீரைவிட இலேசானது. ஆதலால் அது தண்ணீரில் மிதக்கும் இயல்புடையது. அதில் விரைவில் தீப்பற்றிக் கொள்ளும். மண் ணெண்ணெய் கிடைக்கும் இடங்களின் அருகி லுள்ள குளம் குட்டைகளிலுள்ள நீரில் மண் ணெண்ணெய் சம்பந்தம் இருக்கும்; சில இடங்களில் மண்ணெண்ணெய் மிதக்கும்.

ஏறக்குறைய 400 ஆண்டுகளுக்கு முன் அமெரிக்க ஐக்கிய நாட்டில் மண்ணெண்ணெய் தேங்கி இருந்தது. அமெரிக்க நாட்டு மக்கள் அந்த எண்ணெயைச் சுரம் முதலிய நோய் களுக்கு மருந்தாக உபயோகித்தனர். அதனை உடம்பின்மேல் அவர்கள் பூசிக் கொண்டனர். அந்நாட்டிற்குச் சென்ற ஐரோப்பியரே அந்த எண்ணெய் விளக்கெரிக்க உதவும் என்று கண்டுபிடித்தனர். முதன் முதல் மண்ணெண் ணெய்க் கிணறு வெட்ட முயன்றவர் கர்னல் எட்வின்டிரேக் என்பவர். அவர் 1859ஆம் ஆண்டு அமெரிக்காவில் முதன் முதல் மண் ணெண்ணெய்க் கிணறு வெட்டினார். பின்னர் கிணறுகள் பல தோன்றின. அவற்றால் நல்ல வியாபாரம் செய்து பலர் பெருஞ் செல்வரா யினர். அவர்களுள் சிறந்தவர் ராக்பெல்லர் என்பவர்.

இக்காலத்தில் மண்ணெண்ணெய் அமெ ரிக்கா, இரஷியா, பாரசீகம், பர்மா முதலான இடங்களில் ஏராளமாக எடுக்கப்படுகிறது. ஆங்காங்குப் பல கிணறுகள் உள்ளன.

கிணறுகளிலிருந்து எடுக்கப்படும் எண் ணெய் அழுக்குகள் கலந்திருக்கும். அதனைப் பின் சுத்தம் செய்வார்கள். சுத்தப்படுத்தின எண்ணெய் தெளிவான தண்ணீரைப் போலி

ருக்கும். மண்ணெண்ணெயை மிகவும் நன்ருகச் சுத்தம் செய்தால் 'பெட்ரோல்' என்னும் எண்ணெய் கிடைக்கிறது. அதனைத் திறந்துவைத்தால் ஆவியாக மாறிவிடும். அது மிக விரைவில் தீப்பற்றிக்கொள்ளும்.

மண்ணெண்ணெய் ஏராளமாகக் கிடைப்பதாலும், ஏராளமாகச் செலவாவதாலும் மற்ற எண்ணெய்களைவிட அது குறைந்த விலைக்குக் கிடைக்கிறது. மக்களுக்கு மிகவும் உபயோகப்படும் தினசரி வாழ்க்கைப் பொருள்களில் மண்ணெண்ணெயும் ஒன்று.

அருஞ்சொல் விளக்கம்

சேவகன் - வேலைக்காரன். ஆவி முப்பொருள்களுள் ஒன்று. முப்பொருளாவன கனப்பொருள், நீர்ப்பொருள், ஆவிப்பொருள். திடம், திரவம், வாயு பதார்த்தங்கள் என்றும் கூறுவர்.


வினுக்கள்

1. நிலக்கரி எவ்வாறு கிடைக்கிறது?
2. நிலக்கரி எவ்வாறு உண்டாகிறது?
3. நிலக்கரி எவ்வாறு பயன்படுகிறது?
4. மண்ணெண்ணெய் எவ்வாறு உண்டாகிறது?
5. பெட்ரோல் ஆவது யாது?

இலக்கணம்

பாறை பாறையாக, அடுக்கு அடுக்காக — இம்மாதிரி வேறு சில கூறு.

நிலக்கரி சுரங்கத்திலிருந்து கிடைக்கிறது. இம்மாதிரி வெட்டியெடுக்கப்படும் வேறு பொருள்கள் இரண்டு கூறு.



14. வேளாண்மை

வேளாண்மை என்பது பயிர்த்தொழில். வேளாண்மை என்ற சொல்லிற்கு உதவி என்று பொருள். உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவுப் பொருள்களையும், கைத்தொழில்களுக்கு வேண்டிய மூலப்பொருள்களையும் உற்பத்தியாக்கி அளித்து உதவுவது பயிர்த் தொழில் அன்றோ? ஆதலின் இத்தொழிலுக்கு வேளாண்மை என்ற பெயர் வழங்கலாயிற்று.

"நாடு என்ப நாடா வளத்த" என்றார் திருவள்ளுவர். அதாவது வாழ்க்கைத் தேவைக்குப் பிறநாடுகளை எதிர்பாராத நாடே நல்ல நாடு எனப்படும். வாழ்க்கைத் தேவைகளை விளைவிக்கக் கூடியதாம் வேளாண்மை

மற்றெல்லாத் தொழில்களுக்கும் அடிப்படையாகும். ஆகவே இத்தொழில் சாலச் சிறந்த தொழிலாகும்; இத்தொழிலைச் செய்வோரும் அவ்வாறே போற்றற்குரியர். "ஏற்றம் உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர், பழுதுண்டு வேறோர் பணிக்கு"
என்று ஔவையாரும்,

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

என்று திருவள்ளுவரும் அருளியிருக்கின்றனர்.

வேளாண்மைத் தொழில் நம் நாட்டில் பண்டுதொட்டே முதன்மையாக நடைபெறுகின்றது. இந்நாட்டில் கிராமங்களே அதிகம். பெரும்பாலான கிராமங்களில் அடிப்படையான தொழில் வேளாண்மையே. கிராமங்களில் பெரும்பான்மையோர்க்கு வாழ்க்கைத் தொழிலும் வேளாண்மையே. வேளாண்மை செய்வோர்க்கு வேளாளர் என்றும், குடியானவர் என்றும் பெயர்.

முற்காலத்தில் நம் நாட்டுப் பயிர்த் தொழில் நம் தேவைகளை வேண்டிய அளவிற்கு மேல் அளித்து வந்தது. இப்போது மக்களின் தொகை கோடிக்கணக்கில் பெருகியிருப்பதால்,

பல மாவட்டங்கள் உணவு உற்பத்தியில் பற்றுக்குறைப் பகுதிகளாக இருக்கின்றன.

இக்குறையை அகற்றி நிறைவை உண்டாக்க வேண்டும். இம்முயற்சியில் பயிர் செய்வோர் ஊக்கங் கொண்டு உழைக்க வேண்டும். அவர்களுடைய உழைப்பு சிறப்புறுவதற்கு அவர்கள் புதிய விவசாய முறைகளையும் தெரிந்து கொள்ளவேண்டும். புதிய முறையாவது பயன்மிகப் பெறுமாறு, தம் ஆராய்ச்சி முறையாலும், ஏனைய முற்போக்கு நாடுகளைப் பின்பற்றியும் அறிந்துள்ள முறையாகும். நிலம், நீர், விதை, எரு, கால்நடை என்பன இத்தொழிலின் முற்போக்கிற்கு அடிப்படையான சாதனங்கள்.

நம்நாடு இரு வளங்களும் இயற்கையாகவே உடையது. பண்டைக்காலத் தமிழ் வேந்தர்கள் அணைகளைக் கட்டியும், நீர்ப்பாசன வசதிகளை வளர்த்தும் விவசாயத்தைப் பெருக்கி வந்தனர். இவ்வசதிகள் இடைக்கால அந்நியர் ஆட்சியில் எவ்வாறு இருந்திருப்பினும், இப்போது நம் அரசியலார் ஐந்தாண்டுத் திட்டங்களை வகுத்துக் கொண்டு அணைக்கட்டுகளைக் கட்டியும், வாய்க்கால்களை ஆங்காங்கு உண்டாக்கியும் காடாரம்பங்களை

யெல்லாம் நீராரம்பங்களாகப் பெருக்கி வரு கின்றனர்.

விவசாய இலாகாவின் மூலமாகப் பயிர்த் தொழிலில் சிறந்த முறைகளைக் குடியானவர் களுக்குக் கற்பிக்கின்றனர். பாசன வசதியில் லாத இடங்களில் கிணறுகள் தோண்டு வதற்குப் பொருளுதவி அளிக்கின்றனர். மாடு வாங்குதல், விதை, எரு, உழவுக் கருவிகள் வாங்குதல் ஆகியவைகளுக்கும் பொருளுதவி செய்கின்றனர். நல்ல விதை, எரு, உழவுக் கருவி இவைகளைத் தாமே கடனுகவும், குறைந்த விலைக்கும் கொடுத்து விவசாயி களுக்குக் கை கொடுக்கிருர்கள்.

நாட்டிற்குச் செய்ய வேண்டிய நலன் களுள் விவசாய முன்னேற்றத்தையே முதன் மையாகக் கவனிக்கின்றனர். கோயம்புத்தூர் விவசாயக் கல்லூரியில், கற்றவர்களைத் தேர்ந் தெடுத்து அவர்களுக்கு விவசாயப் பயிற்சியை யளிக்கிருர்கள். பயிற்சிபெற்ற உணவு உற் பத்தி ஆய்வர்களைக் கொண்டு கிராம மக்களுக் கும் விவசாய முற்போக்கு முறைகளைக் கூறி வருகின்றனர். உணவுப் பெருக்க அலுவல கங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் பற்பல பகுதிகளிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

விவசாயிகள் தங்கள் வட்டத்திலுள்ள உணவு உற்பத்தி அலுவலகங்களிலிருந்து தங்களுக்கு வேண்டிய உதவிகளைப் பெறக் கூடும். இவ்வாறு அரசியலாரின் முயற்சிகளைக் குடியானவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பண்படுத்தல், விதைத்தல், எரு விடுதல், பருவத்திற் கேற்றவாறு பயிரிடுதல் இவைகளை முறையறிந்து செய்யவேண்டும்.

அருஞ்சொல் விளக்கம்

உற்பத்தி - தோற்றுவித்தல், நாடா - பிறரை எதிர் பாராத, வளத்த - செழிப்புடையவை, தேவை - வேண்டிய பொருள்கள், கல்லூரி - மேற்படிப்புச் சாலை.

வினுக்கள்


1. எத்தகைய நாடு நல்ல நாடு?
2. வேளாண்மையின் சிறப்பைப் பற்றி விளக்கு.
3. வேளாண்மைக்கு வேண்டிய அடிப்படையான சாதனங்கள் யாவை?
4. அரசியலார் விவசாய முன்னேற்றத்தை எவ் வாறு கவனித்து வருகிருர்கள்?

பயிற்சி

பின்வரும் சொற்கள் ஒவ்வொன்றையும் தனித்தனி வாக்கியங்களில் அமைத்துக் கூறு :—

1. முன்னேற்றம், அடிப்படை, எதிர்பார்த்தல், ஒப்பு, தொழுதல், பண்டு, பற்ருக்குறை, நீராரம்பம், காடாரம்பம்.

2. உங்கள் ஊரின் விவசாயத்தைப் பற்றிச் சில வாக்கியங்கள் கூறு.



15. உபாயத்தால் ஆகாதது ஒன்றில்லை

1. குறுமுயல் சிங்கந் தன்னைக்
 கொன்றதொன் றுண்டே தென்னில்
செறியுமோர் காட்டி லேயோர்
 சிங்கமுண் டந்தக் காட்டில்
உறுவிலங் கனைத்தும் வேட்டை
 ஆடிஊன் மிகவும் தின்று
வெறிகொடு திரியும் நாளில்
 விலங்கெலாம் ஒருங்கு கூடி,

2. ஆணிளஞ் சிங்க மேஉன்
 அடவியில் விலங்கை எல்லாம்
வீணிலே கொல்ல வேண்டா
 விதத்தினில் தினமொன் றுக

ஊணுனக் களிப்போம் என்ன
உண்மையாக் கொண்டு சிங்கம்
ஆணையு மிட்டோவ் வொன்ருய்
அருந்தியங் கிருக்கும் நாளில்,

3. தனிமுயல் ஒன்றுக் கோர்நாள்
தன்முறை வருத லோடும்
இனிஅது விடாது நம்மை
எனினுமோர் எடுப்பெ டுத்து
வினையைஇப் போது செய்து
வென்று நாம் உய்ந்தோ மாகில்
நனிவிலங் கனைத்தும் உய்யும்
நமக்கும்நற் புகழுண் டென்றே,

4. கருதிஅச் சிங்கத் தின்தன்
கடும்பசி வேளை தப்பி
வருதலும் முயலை நோக்கி
மன்னனம் பசிவே ளைக்குப்
பெருமத வேழ மேனும்
பிந்துவ தில்லை பிந்தி
வருவதென் உரையாய் என்று
மனந்தனிற் சினந்து கூற,

5. "அய்ய" நின் பசித்த வேளைக்
கடியனேன் வந்தேன் ஆங்கோர்
வெய்யசிங் கத்தைத் கண்டு
வெருவியங் கொளித்தி ருந்தேன்

பய்யவே சிங்கம், ஆங்கோர்
பருமுழை புகுந்த பின்னர்த்
துய்யஉன் பக்கல் வந்தேன்
சுவாமி'' என் றிறைஞ்சி நிற்க,

6. சிங்கம் ''நா மல்லால் வேருேர்
சிங்கம்நீ கண்டா யாகில்
அங்கதைக் காட்டு வா''என்
றழைத்தலும், அழைத்துப் போயோர்
பங்கமும் புனலும் சேர்ந்த
பாழ்ந்துர வதனைக் காட்ட
அங்கதை எட்டிப் பார்த்த(து);
அதனிழ லுருவந் தோன்ற,

7. தன்னுரு நிழலைத் தானே
சத்துரு வென்று பாய்ந்து
துன்னுபங் கத்த ழுந்தித்
துளங்கியே உயிரி ழந்த
தென்னலால் உபாயத்தாலே
யாவையும் வெல்ல லாமென்
றின்னவோர் நீதி தன்னை
இன்றுநா மறிந்தோ மன்றே.

அருஞ்சொல் விளக்கம்

1. குறுமுயல் - சிறிய முயல், செறியும் - மரங்கள் அடர்ந்த, உறுவிலங்கு - பொருந்திய மிருகங்கள், ஊன் - மாமிசம், வெறி - மதம், கொடு - கொண்டு.
2. அடவி - காடு, ஊண் - உணவு, ஆணை - கட்டளை, அருந்தி - உண்டு.
3. எடுப்பு - தந்திரம், வினை - காரியம், உய்ந்தோம் - பிழைத்தோம், நனி - மிகுந்த, உய்யும் - பிழைக்கும்.
4. கடும்பசி - கொடிய பசி, வேளை - சமயம், மன்னன் நம் - அரசனாகிய நம்முடைய, வேழம் - யானை, பிந்துவதில்லை - காலங்கடந்து வருதல் இல்லை.
5. வெய்ய - கொடுமையான, வெருவி - பயந்து, பய்யவே - மெள்ள, பருமுழை - பெரியகுகை, துய்ய - சுத்தமானவனே.
6. பங்கம் - சேறு, புனல் - நீர், பாழ்ந்துரவு - பாழுங் கிணறு.
7. உருநிழல் - பிரதிபிம்பம், சத்துரு - பகைவன், துன்னு - நிறைந்த, துளங்கி - நடுங்கி, உபாயத்தால் - தந்திரத்தால், இன்ன - இத்தகைய.

பயிற்சி

இக் கதையை உன் சொந்த வார்த்தைகளில் எழுது.

16. கடிதம் எழுதுதல்

நாம் பிறருக்கு அறிவிக்க வேண்டிய செய்திகளை நேரிலும் கூறுகிறோம்; காகிதத் தாள்களில் எழுதியும் தெரிவிக்கிறோம். அவ்வாறு செய்திகளை எழுதித் தெரிவிப்பது கடிதம் எழுதுதல் எனப்படும். கடிதங்களில் பலவகைகள் உண்டு; எழுத வேண்டிய முறைகளும் உண்டு.

எழுதும் முறை

கடிதத்தில் செய்திப் பக்கம், முகவரிப் பக்கம் என இரு பகுதிகள் உண்டு.

செய்திப் பக்கம்: இப்பக்கத்தைத் தலைப்பு, உடல், முடிவு என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

தலைப்புப் பகுதியில் வலது பக்க உச்சியில் கடிதம் எழுதும் இடமும் தேதியும் குறிப்பிட வேண்டும். உடற் பகுதியில் இன்னார் இன்னாருக்கு வணக்கம் அல்லது வாழ்த்து கூறியபிறகு, செய்திகளை எழுத வேண்டும். அதாவது செய்திகளுக்குக் கீழ், எழுதுபவரின் கையொப்பம் இடவேண்டும். (மேலே தேதி முதலியன எழுதாவிட்டால் செய்திகளுக்குக் கீழ் இடது பக்கம் குறிக்கலாம்.)

முகவரிப் பக்கம்: முகவரியை மேல் விலாசம் என்றும் கூறுவர். கார்டுகளில் (அஞ்சல் அட்டைகளில்) முகவரிப் பக்கம், செய்திப் பக்கம் என இரண்டு பக்கத்தையும் கவனித்திருப்பீர்கள். உறைகளில் மேல் பக்கமே முகவரிப்பக்கம். இதில் பெயர், வீட்டு எண், தெரு, வசிக்கும் ஊர், அஞ்சல் நிலையம் (தபாலாபீஸ்), அவசியமானுல் மாவட்டம் இவைகளைக் குறிக்கவேண்டும்.

கடிதத்தில் பலவகையாவன

1. உறவினர், நண்பர் முதலியோருக்கு எழுதுவன.
2. வர்த்தகக் கடிதங்கள்
3. விண்ணப்பங்கள்

மாதிரிக் கடிதங்கள்

1. சிறியவர் பெரியவருக்கு எழுதும் கடிதம்

15, வடக்கு மாசி வீதி,
மதுரை
30—10—59.

அன்புள்ள மாமா அவர்களுக்கு,

சுந்தரம் வணக்கம். என் பெற்ருேரும், நானும், மற்றவர்களும் நலம். அவ்விடத்திய நலன்களையும் அறிய விரும்புகிறேன்.

சென்ற தசரா விடுமுறையில் தங்கள் கடிதப்படி நான் அங்கு வரமுடியவில்லை; மன்னிக்க வேண்டுகிறேன். அப்பா சென்னைக்குப் போயிருந்தார். ஆகையால் அம்மாவுக்குத் துணையாக இருக்க வேண்டியிருந்தது. அடுத்த விடுமுறையில் அம்மா என்னை அங்கு வரலாம் என்று கூறியிருக்கிறார்கள்.

வணக்கம்

இப்படிக்கு,
சுந்தரம்.

முகவரி :

திரு. பழனியப்பன்,
20, கீழ ஆண்டார் வீதி,
திருச்சிராப்பள்ளி–2.

2. பெரியவர் சிறுவருக்கு எழுதும் கடிதம்

38, வடக்கு உள் திருவீதி,
திருவரங்கம் 2—10—59.

அன்புள்ள மகள் கமலாவுக்குத் தாயார் வாழ்த்து. உன் அப்பா, தம்பி முதலிய யாவரும் நலம். அங்கு எல்லோருடைய நலத்தைப் பற்றித் தெரிவிப்பாயாக.

இந்த ஐப்பசித் திங்கள் உன் தம்பி பாலனுக்கு ஆண்டு நிறைவு வருகிறது. அப்பாவும் மாப்பிள்ளைக்கு அழைப்புக் கடிதம்

எழுதுவார். நீ உன் கணவரையும், பாப்பா வையும் அழைத்துக்கொண்டு வருவாயாக. தீபாவளிக்கு உங்கள் எல்லோருக்கும் புத்தாடைகள் வாங்கி வைத்திருக்கிறோம். வாழ்த்து.

இப்படிக்கு,
நீலவேணி.

முகவரி :
கமலா,
10, புதுத்தெரு,
ஈரோடு.

3. வர்த்தகக் கடிதம்

78, தேர் வீதி, கரூர்.
30—10—59.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
திருநெல்வேலி.

ஐயா,

தாங்கள் வெளியிட்டுள்ள நீதி நூற் கொத்து மூலமும் உரையும் 1, 2 பாகங்கள் ஒவ்வொன்றிலும் பத்துப் புத்தகங்கள் என் முகவரிக்கு இரயில்வே பார்சலில் அனுப்பி இரயில்வே சீட்டையும், பட்டியலையும் மேற் கண்ட என்வீட்டு விலாசத்திற்குக் கரூர் வைசியா பாங்கு மூலமாக அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு,
இராச. மாணிக்கம்.

4. ஓய்வு விண்ணப்பம்

ஆசிரியர் அவர்கள்,
ஐந்தாவது வகுப்பு,
தாயுமானவர் உயர்தரப்பள்ளி,
மலைக்கோட்டை, திருச்சி.

ஐயா,

என் அக்காள் ஆண்மகவு ஈன்றிருக்கிருள். தங்களிடம் விடை பெற்று, என்னை இரண்டு நாட்கள் வீட்டில் இருக்குமாறு தாயார் கூறுகிருர். ஆகையால் இன்று, நாளை, இரண்டு நாட்களும் எனக்கு ஓய்வு அளிக்குமாறு வேண்டுகிறேன்.

30, வடக்குத் தெரு,
மலைக்கோட்டை
4—10—59

தங்கள் வணக்கமுள்ள,
மா. சின்னசாமி,
5ஆம் வகுப்பு மாணவன்,
தாயுமானவர் பள்ளி.

பயிற்சி

1. உங்கள் ஊர் திருவிழாவிற்கு வரும்படி உன் அத்தைக்கு ஒரு கடிதம் எழுது.
2. உன் வகுப்பாசிரியருக்கு ஓர் ஓய்வு விண்ணப்பம் எழுது.
3. நீ அறிந்துள்ள விலாசத்திற்கு ஒரு வர்த்தகக் கடிதம் எழுது.

குறிப்பு: பாங்கு — உண்டியல் கடை.
பார்சல்: கட்டு.

17. வாய் திறவாமல் படி

1. எலியும் தவளையும்: ஒரு வயலில் ஓர் எலியும், அடுத்திருந்த குளத்தில் ஒரு தவளையும் வசித்து வந்தன. ஒரு நாள் அவை இரண்டும் நட்புக் கொண்டு கரையின் மேல் பேசிக்கொண் டிருந்தன. ஒன்றின் காலுடன் மற்றொன்றின் காலைக் கயிற்றால் கட்டிக் கொண்டன. பேச்சு முடிந்தது. தவளை குளத்தில் தாவிக் குதித்தது. எலியின் உடலும் குளத்திற்கு இழுக்கப்பட்டது. நீரில் இருக்க எலியால் முடியுமா? அது திக்கு முக்காடிச் செத்துப்போயிற்று. எலியின் உடல் நீரின் மேல் மிதந்தது. வானத்தில் வட்டமிட்டுக் கொண்டிருந்த ஒரு பருந்து எலியின் உடலைக் கால்களால் பற்றித் தூக்கிக் கொண்டு பறந்தது. எலியின் உடலுடன் தவளையும் தூக்கிச் செல்லப் பட்டது. பருந்திற்கு இரட்டைப்படி வேட்டை.

2. ஆபத்தில் உதவாத சிநேகிதன்: இரண்டு நண்பர்கள் சேர்ந்து கொண்டு, ஒரு காட்டுப் பாதையின் வழியாக ஓர் ஊருக்குச் சென்று கொண்டிருந்தார்கள். இடைவழியில் கண்ணிற்கெட்டிய தொலைவில், ஒரு கரடி வந்து கொண்டிருந்ததைக் கண்டார்கள்.

அவர்களுள் ஒருவன் "நாம் இருவரும் சேர்ந்து அவ்விலங்கை எதிர்த்துக் கொல்வோம்" என்றான். மற்றவன் "எனக்கு மரம் ஏறத் தெரியும்" என்று சொல்லிக் கொண்டே, ஒரு மரத்தின் மேல் ஏறி இலைகளின் மறைவில் ஒளிந்து கொண் டான். மற்றவன் அச்சத்தால் அறிவிழந்து மரத்

தினடியில் விழுந்தான்; பிணம்போல் கிடந்தான். கரடி அருகில் வந்தது. தரையில் கிடந்தவனை முகர்ந்து பார்த்தது. மூச்சு இல்லை. பிணம் என்று எண்ணி அப்பால் சென்றுவிட்டது. (தானே செத்த பிணத்தைக் கரடி தின்னாது என்பர்.)

மரத்தின்மேல் இருந்தவன் கீழே இறங்கி வந்தான். படுத்திருந்தவனைத் தட்டி எழுப்பினான். "கரடி போய்விட்டது: வா போவோம்" என்றான். "கரடி உன் காதண்டை வந்து என்ன இரகசியம் சொல்லிற்று" என்று கேட்டான். அதற்கவன் "ஆபத்தில் உதவாத சிநேகிதனை நம்பாதே என்று சொல்லிற்று" என்றான். (யார் ஆபத்தில் உதவாத சிநேகிதன்?)

3. காகமும் மானும்: ஒரு மரத்தின்மேல் ஒரு காகம் வசித்தது. அம்மரத்தின் கீழ் ஒரு மான் வசித்தது. இரண்டிற்கும் நல்ல நட்பு. நாள் தோறும் காலையில் அவை தனித்தனியே இரை தேடச் செல்லும். மாலையில் இருப்பிடத்திற்கு வந்துவிடும். மானை வழக்கம் போல் காணவிட்டால் யாது நேர்ந்ததோ என்று காகம் கவலைப் படும்.

ஒரு நாள் ஒரு நரி வந்தது. மானுடன் இனிமையாகப் பேசிற்று. உள்ளத்தில் கெட்ட எண்ணம். அது மானுக்குத் தெரியுமா? தன்னை நட்பாகக் கொள்ளும்படி மானைக் கேட்டது. காகம் "மானே, நரியை நம்பாதே" என்று சொல்லிற்று. நரியின் பேச்சில் மான் மயங்கிவிட்டது; அதை நட்பாகக்

கொண்டது. அதுமுதல் நரியும் நாள்தோறும் வரும்; இனிமையாகப் பேசும்; போய்விடும். ஒரு நாள் நரி வந்தது. "மானே, என்னுடன் வா; நல்ல புற்கள் உள்ள இடத்தைக் காட்டுகிறேன்" என்றது. மான் நம்பிற்று; கூடப் போயிற்று. நரி ஒரு வயலைக்காட்டி "அதோ பார் பச்சைப் பசேல் என்று புற்கள்; வயிறார மேய்" என்றது. மான் மேய்ந்தது. மாலைப்போதில் திரும்பி விட்டன. இப்படியே சில நாட்கள் ஆயின.

நாளுக்கு நாள் பயிரின் அழிவை வயலுக் குடையவன் கண்டான். ஒரு நாள் ஒரு வலையை வீசிவிட்டுத் தடியும் கையுமாக அப்பால் ஒளிந்து கொண்டிருந்தான். வழக்கம்போல் மான் மேய ஆரம்பித்தது. நரி அதன் கூடக் கூடச் செல்வது போல் தொடர்ந்து அவ்வயலுக் கண்டை ஒளிந்து கொண்டிருந்தது. மான் வலையில் சிக்கிக் கொண் டது. "என்னை விடுவிக்க உதவி இல்லையே; மோசம் போனேனே" என்று வருந்திற்று. "நரி எங்கேயோ வருவது போல் வந்தது. மான் "நரி நண்பா, தெரியாமல் சிக்கிக் கொண்டேன், நல்ல வேளை வந்தாயே; வலையை அறுத்து என்னை விடுவிப்பாயா? என்று கேட்டது. "பாவமே, என்ன கெட்டவேளை உனக்கு! இன்று எனக்கு நோன்பு; வலையில் தோல் இருக்கிறது. நான் தொடமாட்டேனே" என்று கூறி அகன்றது.

மாலை ஆயிற்று. வழக்கம்போல் மானைக் காணுமையால் காகம் தேடிக்கொண்டு வந்தது. மானின் நிலைமையைப் பார்த்தது; 'நரி எங்கே' என்று கேட்டது. "என் இறைச்சியைத் தின்ன,

ஒளிந்து கொண்டு இருப்பான்" என்று மான் சொல்லிற்று. "ஒரு தந்திரம் சொல்கிறேன்; கேள். நீ செத்ததுபோல் படுத்துக்கொள். நான் உன்னைப் பொய்யாகக் கொத்திக் கொண்டிருக் கிறேன். நான் கத்தும்போது நீ எடு ஓட்டம்" என்றது. இரண்டும் அவ்வாறே செய்தன.

வயலுக்கு உடையவன், அருகில் வந்தான். 'மான் செத்துப் போயிற்று' என்று சொல்லிக் கொண்டே வலையை எடுத்தான்; அதை வைப்பதற் காக வீடுநோக்கிச் சென்றான். அவன் அப்பால் சென்றதும் காகம் கத்திற்று. அவ்வளவு தான், 'தப்பித்தேன், பிழைத்தேன்' என்று எழுந்து ஓடிற்று.

வயற்காரன் திரும்பிப் பார்த்தான். 'என்ன பாசாங்கு? என்னை ஏமாற்றி விட்டதே' என்று சொன்னான். கைத்தடியை ஓடும் மானை நோக்கி வீசினான்; குறி தப்பிற்று. நரி மானின் நிலைமை யைப் பார்க்க விரும்பித் தலையை நீட்டிற்று. வீசிய தடி நரியின் தலைமேல் பலமாகப் பட்டது. நரி இறந்தது.

வினாக்கள்

1. இக்கதைகளில் கூடா நட்பு எது?
2. ஆபத்தில் உதவாத சிநேகிதன் யார்?
3. நல்ல நட்பு எது?
4. உள்ளத்தில் கெட்ட எண்ணம்; வெளியே இன் சொல்—எதற்கு?

18. நட்பு

நட்பு என்பது ஒரு தனிச் செல்வம். ஒருவர்க்கு நட்பினர் பலர் அமைவது ஒரு பெரும் பேறு. ஒருவர் பல நண்பர்களை உடையவர்; அதாவது பலர்க்கும் அறிமுக மானவர் என்றால் அவருடைய வாய்ச்சொல் எங்கும் செல்லும். ‘உயிர் கொடுப்பான் தோழன்’ என்ற பழமொழியை யாவரும் கேட்டிருக்கிறோம். இங்குத் தோழன் என்பது நல்ல தோழனை. ஆகவே நல்லோர் நட்பு யாவரும் கொள்ளற்பாலது.

கற்குந்தோறும், கற்கும் தோறும் நூல் நயமளிக்கும்; அது போன்று நல்லோர் நட்பும் பழகப் பழக நன்மை மிகத் தரும். கரும்பை நுனியிலிருந்து அடிப்புறமாகத் தின்பதை யொப்ப, நல்லோர் நட்பும் பயன் தரும் என்பர்.

ஒருவருடன் நட்புக் கொள்வதற்கு முன்னால் அவருடைய பண்புகளை ஆய்ந்தறிய வேண்டும். நட்பிற்குரியவர் என்று தெரிந்தால் அவருடைய நட்பு கொள்ளற்பாலது. ஆய்ந்தாய்ந்து கொள்ளாத நட்பு சாந்துயரம் தரும்.

‘கூடிப் பிரியேல்’ என்றார் ஔவையார். அதாவது ஒருவருடன் நட்புக்கொண்டால்

இடையே விட்டுப் பிரிதல் பண்பாகாது. நண்பர்கள் ஓர் உயிரும், இரண்டு உடலும் போல வாழவேண்டும். எத்துணை நட்புடையவர் ஆயினும் ஒருமுறை பிரிந்து மீண்டும் சேர்ந்தால் அந்நட்பின்முறை உறுதிப் படாது. சிறிது நீங்கி மறுபடியும் சேர்ந்தால் அதன் உறுதிநிலை போய்விடும் அன்றோ?

தகாதவருடன் அதாவது தன் நிலைக்கு ஒவ்வாதவருடன் நட்புக் கொண்டாலும் துன்பம் உண்டாகும்.

(எலியும் தவளையும் என்ற கதையை கேட்டிருப்பீர்கள்.)

சிலர் சிரித்துச் சிரித்துப் பேசுவர். சிரிப்பது நட்பிற்கு இலக்கணம் ஆகாது. உள்ளமுற நேசிப்பதே நட்பிற்கு இலக்கணம். நண்பர்கள் நாள்தோறும் ஒருவரையொருவர் காணவேண்டுமென்பதோ அல்லது ஒருவரோடொருவர் உரையாட வேண்டுமென்பதோ இல்லை. உண்மையான நண்பர்கள் கண்டாலும், காணாவிட்டாலும், எங்கிருந்தாலும் நன்மையே விரும்புவர். நல்லோர்கள் ஒரு நாள் பழகினும் சாலும்; அவருடைய நட்பு மாறாது. கொடியவர்கள் நீடு நாள் பழகினாலும் உள்ளமுற நேசிக்க மாட்டார்கள். அவர்களுடைய நட்பு உறுதிப் படாது.

“ ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை
இரு நிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே ”
“ நூறுண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குள் பாசி போல் வேர்க்கொள்ளாதே”

என்று பாடினர் அதிவீரராம பாண்டியர்.

(இவர் மன்னனும் புலவரும் ஆவர்.)

உற்றபோது உதவுவதே நண்பர் இலக்கணம். துன்பம் வந்துற்றபோது உதவாதவர்கள் நல்ல நண்பர்கள் ஆகமாட்டார்கள்.

(“ஆபத்துக் காலத்தில் உதவாத சிநேகிதனை நம்பாதே” என்று கரடி சொல்லிய கதையை நாம் கேட்டிருக்கிறோம். பஞ்ச தந்திரக் கதையில் காகமும் மானும் வாழ்ந்தது போல உற்றபோது உதவுவது போல நட்பு.)

ஒருவரோடு நட்புக் கொண்டால் அவருடைய நலனை எப்போதும் நாடவேண்டும். அவர் நல்ல வழியில் நடப்பாராயின் நலம் பெறுவர்; தீயவழியிற் செல்வாராயின் தீங்குறுவர். தீயவழியிற் செல்லுமிடத்து அவரைக் கண்டித்து திருத்துவதே நட்புக் கொண்டவரின் கடமை.

“ நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு ”

என்றார் வள்ளுவரும். ஆகையால் பிள்ளைகளே, நீங்கள் நல்லவர்களோடு நட்புக்

கொண்டு நலமாக வாழ்வீர்களாக. கூடா நட்பைக் கொள்ளாதிருப்பீர்களாக.

அருஞ்சொல் விளக்கம்

அறிமுகமானவர் - தெரிந்தவர், வாய்ச் சொல் - சொல்லும் வார்த்தை, நயம் - இன் சுவை, இனிமை, கேண்மை - நட்பு.

வினாக்கள்

1. நல்லோர் நட்பு எதைப் போன்று பயன் தரும்?
2. எந்த நட்பு 'சாந்துயரம் தரும்'?
3. பிரிந்துவிட்டுச் சேர்தல் எதைப்போல் ஆகும்?
4. நட்பிற்கு இலக்கணம் யாது?
5. பெரியோர் கேண்மை எத்தன்மைத்து?

இலக்கணம்

நான் நல்லோரை விரும்புகிறேன்.

இவ்வாக்கியத்தில் விரும்புகிறேன் என்ற சொல்லில் கருத்து முடிகிறது.

யார் விரும்புவது? நான் விரும்புகிறேன்.

யாரை விரும்புகிறேன்? நல்லோரை விரும்புகிறேன்.

'நான்' எழுவாய். 'விரும்புகிறேன்' பயனிலை. 'நல்லோரை' செயப்படுபொருள். எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பன வாக்கியத்தின் உறுப்புக்கள்.

பயிற்சி

எழுவாய் முதலியன கூறுக:—

1. நான் உன்னை நேசிக்கிறேன்.
2. குழந்தை பால் குடிக்கிறது.
3. நல்லோர் நட்பு நன்மை தரும்.

19. கைத்தொழில்

1. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்
   கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்
எத்தொழில் எதுவும் தெரியாமல்
   இருப்பது உனக்கே சரியாமோ ?

2. உழவுந் தொழிலும் இல்லாமல்
   உலகில் ஒன்றும் செல்லாது
விழவும் கலையும் விருந்துகளும்
   வேறுள இன்பமும் இருந்திடுமோ

3. நெசவுக் காரர்கள் நெய்யாமல்
   நிலத்தவர் உடைக்கென் செய்வார்கள்
குயவன் செய்திடும் பாண்டமன்றோ
   குடித்தனம் நடத்திட
      வேண்டுமென்றும் ?

4. கொல்லரும் தச்சரும் கூடாமல்
   கூடமும் மாடமும் வீடாமோ ?
கல்லடி சிற்பியும் தச்சருமே
   காரியம் பலவினுக் கச்சாணி.

5. வேந்தர்கள் வரிப்பணம் வாங்குவதும்
   வீரர்கள் வெற்றிகள் தாங்குவதும்
மாந்தர்கள் செய்யும் எத்தொழிலும்
   மண்ணிற் சிறப்பது கைத்தொழிலால்.

6. கைத்தொழில் தம்மைக் காத்திடுவோம்
கலகம் பற்பல தீர்த்திடுவோம்
பொய்த்தொழில் யாவும் குறைந்திடவே
பூமியில் தாமே சிறந்திடுவோம்.

7. கைத்தொழில் மெத்தவும் பரிவுடன்
காப்பது நம்முடை கடனாகும்
எத்தனை ஏழையின் நித்திய சீவனம்!
எண்ணுவதே வெகு புண்ணியமாம்!

8. ஆதலினால் ஒரு போதனை கொள்வாய்
அன்புரை இன்பத் தமிழ்மகனே!
வேதனைகள் பல போதனை விரும்பிடில்
விதியெனக் கைத்தொழில் விருத்தி
செய்வாய்.

நாமக்கல் கவிஞர்
வே. இராமலிங்கம் பிள்ளை.

அருஞ் சொல் விளக்கம்

மாந்தர் - மனிதர், விழவு - சிறப்பு நாட்கள், வேதனை - துன்பம், போதனை - கூறப்படுவது, விதி - முறை, கடமை செய்ய வேண்டுவது, விருத்தி - பெருக்கம்.

வினாக்கள்

1. கைத்தொழில் என்பது பற்றிப் பத்துவரிகள் எழுது.
2. சில கைத்தொழிலாளர்களின் பெயர்களையும் தொழிலையும் கூறு.



20. உத்தமர் உறவு

(பஞ்ச தந்திரக் கதைகள்)

கோதாவரி நதிக்கரையில் ஒரு பெரிய வன்னிமரத்தின் கீழ் ஒரு நாள் ஒரு வேடன் தனது வலையை விரித்து அதில் பலவகைத் தானியங்களைத் தெளித்தான்; பின் செடி மறைவில் பதுங்கிக் கொண்டான். சிறிது நேரத்திற்கெல்லாம் அவ்விடத்திற்குச் சித்திரக் கிரீவன் என்னும் புரு அரசு தன் பரிவாரத் தோடு வந்து அந்த மரத்தில் தங்கியது. சித்திரக்கிரீவன் அங்குள்ள தானியத்தைப் பார்த்து, "மனித நடமாட்டமில்லாத இக் காட்டில் தானியங்கள் எப்படி வரும்? யாராவது கொண்டுவந்து போட்டிருப்பார்கள்.

உண்மை தெரியாமல் ஒருவரும் தானியத்தைத் தின்னக்கூடாது. ஆத்திரப்பட்டால் நமக்கு ஆபத்து வரும்'' என்று தன் பரிவாரங்களுக்குக் கட்டளையிட்டது.

கர்வங்கொண்ட ஒரு புரு அரசனது ஆணையை அவமதித்தது. "இப்படி ஆலோசித்தால் நமக்கு இறையொன்றும் அகப்படாது; தீராச் சந்தேகமுள்ளவர் துக்கத்தையே அனுபவிப்பர்'' என்றது. இப் புருவின் பேச்சில் மயங்கி எல்லாப் புருக்களும் தானியத்தைத் தின்னும் பொருட்டுப் போய் வலையிலகப்பட்டன. இது கண்ட புரு அரசும் தான் தனியாக இருந்து பலனென்ன என்று தானும் வலையில் விழுந்தது. இது கண்ட வேடனும் வலையை நெருங்கி வந்துகொண்டிருந்தான். அப்போது புருக்களெல்லாம் தம் அரசனிடம் "துட்டன் வார்த்தையைக் கேட்டு நாங்கள் துன்பப்படுகிறோம்; எங்களைக் காப்பாற்ற வேண்டும்'' என்று வேண்டின. அப்போது சித்திரக்கிரீவன் "இப்போது நிகழ்ந்ததை நினைத்துத் துக்கிப்பதால் பலனில்லை; எல்லோரும் வலையுடன் ஒருமிக்கப் பறந்து வேறிடத்திற்குப் போக வேண்டும். அப்படிச் செய்தால் நமது உயிரைக் காப்பாற்றலாம்'' என்று யோசனை சொல்லியது.

இதைக்கேட்டதும் எல்லாப் பறவைகளும் வலையோடு கூடப் பறந்து போயின. வேடன் தூரத்திலிருந்து பார்த்து ஆச்சரியப்பட்டான். அவைகள் அப்போது ஒரே மனதாய் வலையைக் கொண்டு போயினும் அவைகளுக்குள் ஒன்றுக் கொன்று எப்படியும் சண்டையிட நேரிடும்; அப்போது தன் கையில் அகப்படும் என்று எண்ணிப் புருவின் பின்னே ஓடினன்.

ஆனல் புருக்களுக்குள்ளே அப்படி ஒன்றும் நேரவில்லை. (முன்பு தலைவன் பேச்சைக் கேளாது ஆபத்தில் சிக்கிய புருக்கள் இப்பொழுது தவறுமா?) எல்லாம் ஒற்றுமையோடு பறந்து வேடன் கண்ணுக்கும் அகப்படாது நீண்ட தூரம் சென்று விட்டன. புரு அரசு அவைகளைக் **கண்டகி** நதிக்கரையிலுள்ள **சித்திர வனத்**திற்குச் செல்லுமாறு கட்டளையிட்டது. "அவ்வனத்தில் எனக்கு நெருங்கிய நண்பனுன **இரணியகன்** என்னும் எலியரசன் இருக்கிருன். அவனிடத்திற்குச் சென்ருல், நமது வலையை அறுத்து, நம் எல்லோரையும் விடுவிப்பான்" என்றது. அவ்விதமே புருக்கள் சென்று எலியரசன் வளையண்டையில் இறங்கின.

பின் சித்திரக்கிரீவன், தன் நண்பன் இரணியகனை அழைத்தது. நண்பனது

இனிய ஓசையைக் கேட்ட எலியரசன் வளையி லிருந்து வெளிவந்து, “ மன மொத்த நண்பர் களோடு பேசுவதைவிட மகிழ்ச்சி வேறு என்ன இருக்கிறது ?” என்று உபசாரம் சொல்லிற்று. பின்பு, தன் நண்பனின் துன்பத்தைப் பார்த்து, “ எல்லோரினும் மிக வல்லவனான நீ வேடன் வலையில் சிக்கியது விதியின் செயலே” என்று வருந்தி, முதலில் சித்திரக்கிரீவனைச் சுற்றியிருந்த வலைக் கயிற்றை அறுக்கத் தொடங்கிற்று.

அப்போது சித்திரக்கிரீவன், “ நண்பா ! நீ முதலில் என் பரிவாரங்களை விடுவி. பின் னால் என்னைச் சுற்றியுள்ள கயிற்றை அறுக்க லாம். இவர்கள் என்னை அரசனாக நினைக்கி ரூர்கள். ஆகையால், என் உயிரைக் காப் பாற்று முன் என் பரிவாரங்களைப் பிழைப்பிப் பாய் ” என்று மறு மொழி சொல்லிற்று.

இதைக் கேட்ட எலி, “ நீ பரம சாது ; அடுத்தவர்களை ஆதரிக்கின்றவன். எசமான னிடத்தில் விசுவாசமாயிருக்கிற சேவகனும், சேவகனிடத்தில் பிரியமாயிருக்கிற எசமான னும் இன்பமடைவார்கள் ” என்று புகழ்ந்து கூறிற்று. பின் எல்லாப் புருக்களின் கட்டு களையும் அறுத்து, ‘ சித்திரக்கிரீவனையும் விடு வித்தது. பின்பு ஒன்றுக்கொன்று உபசார

வார்த்தைகள் சொல்லிக் கொண்டன. சித்சிரக்கிரீவன் தனது பரிவாரங்களோடு தன்னிடத்திற்குப் போயிற்று.

அருஞ்சொல் விளக்கம்

நதி - ஆறு (மேற்கிலிருந்து கிழக்கு முகமாக ஓடுவது. கிழக்கிலிருந்து மேற்கு முகமாக ஓடும் ஆறு நதம் எனப்படும்) பரிவாரம் - சேர்ந்த கூட்டம். துட்டன் - கொடியவன். விதி - வினை.

வினாக்கள்

1. சித்திரக்கிரீவன் தன் கூட்டத்தை நோக்கி என்ன எச்சரிக்கை செய்தது ?
2. புருவரசு எலியரசனிடம் மற்றப் புருக்களை முதலில் விடுவிக்கும்படி கூறிற்று ஏன் ?
3. 'இன்பமடைவார்கள்'—யார் ?


இலக்கணம்

மெய் பேசு : இவ்வாக்கியத்தில் பேசு பயனிலை. மெய் செயப்படுபொருள். எழுவாய் எங்கே? யோசித்துப் பார். (நீ பேசு) நீ என்பது மறைந்து நிற்கின்றது. மறைந்து நிற்பது தோன்றா எழுவாய்.

பயிற்சி

கேட்டவாறு மாற்று :

1. வேடன் பதுங்கிக் கொண்டான். (நிகழ் காலமாக)
2. புருக்கள் பறக்கின்றன. (இறந்த காலமாக)
3. மழை பெய்கிறது. (வருங்காலமாக)
4. புருக்கள் எல்லாம் ஒற்றுமையோடு பறந்து வேடன் கண்ணுக்கு அகப்படாது நீண்ட தூரம் சென்றுவிட்டன. (சிறு வாக்கியங்களாகப் பிரி)
5. நீ வீட்டுக்குப் போ. உன் புத்தகங்களை எடுத்துக் கொள். இங்கே வா. (ஒரே வாக்கியமாகச் செய்.)
6. தோன்றா எழுவாய் வரும்படி மூன்று வாக்கியங்கள் கூறு.



21. ஒப்பற்ற ஊழியன்

மக்களுக்குப் பலவகையிலும் உதவும் ஓர் ஒப்பற்ற ஊழியனைப் பற்றி இப்போது படிக்கின்றோம். இவ்வூழியன் ஓர் உயர்திணைப் பொருள் அல்ல; ஓர் அஃறிணைப் பொருளே. இப்பாடத்தில் உயர்திணைப் படுத்திப் பேசுகின்றோம்.

இவ்வூழியன் நம்முடைய கட்புலனுக்குப் புலப்படாதவாறு ஓர் ஆற்றல் வடிவினன். ஆற்றல் வடிவிலே இவன் ஒலியும், ஒளியும், வெப்பமும் கொண்டு விளங்குகின்றான். இவனை நாம் கண்களால் காணமுடியாவிடினும், உணர்ச்சியால் அறிகின்றோம். நாம்

இவன் மீது படுவோமாயின் இமை கொட்டு முன் உடலை ஈர்த்துக் கொள்வான்; உதறி விட்டு இப்பால் வருவது அரிது; இமைப் பொழுதில் மீளாவிட்டால் உயிர் போய்விடும்.

இவ்வாற்றல் உருவினனைத் தொடவும், நெருங்கவும் கூடாது. இவன் திரண்டு இருக்கும் இடங்களில் சுற்றுக் கம்பிவேலியை யும். "தொடாதே, எச்சரிக்கை" என்ற விளம்பரப் பலகையையும் காணலாம். ஆயி னும் தொட்டால் நமனாக விளங்கும். இவனை அறிவுகொண்டு அடிமையாக்கிச் சிறந்த ஊழியனாக ஆக்கிக் கொள்ளலாம்.

விஞ்ஞானிகள் (அறிவியல் நூல் வல்லு நர்கள்) நீடுநாள் ஆராய்ச்சி செய்து இவ் வாற்றல் வடிவினனைக் கண்டுபிடித்தார்கள். முதன் முதலில் இவன் ஈர்க்கும் தன்மை யுடையவன் என்பதைக் கண்டறிந்தனர். இவன் உலோகங்களில் ஊடுருவிக் கடிது செல்வான் என்பதைக் கண்டறிந்தார்கள். இரப்பரிடத்திலும் மரக்கட்டையிலும் இவனு டைய வன்மை செல்லாது என்ற உண்மை கண்டுபிடிக்கப்பட்டது. இரப்பர் உறையை அணிந்து கொண்டு இவன் நிறைந்துள்ள கம்பிகளைத் தொடுகிறோம்.

ஏறக்குறைய நூறாண்டுகளுக்கு முன்

அமெரிக்கராகிய பெஞ்சமின் பிராங்க்ளின் என்பார் இவனைக் கண்டுபிடித்து விளம்பரம் செய்தார். பின் ஒவ்வொருவராகப் பல விஞ் ஞானிகள் இவனைப் பயன்படுத்திக் கொள் ளும் வகைகளைக் கண்டு பிடித்தார்கள்.

உலோகங்களின் இணைப்புறவால் இவன் தோன்றுகின்றான் என்றும், செல்கள் என் னும் மின்கலத்தில் இவனைச் சேமித்துக் கொள்ளலாமென்றும் கண்டறிந்தனர்.


காந்தப்புலத்தில் செப்புக்கம்பிச் சுரு ளைச் சுற்றுவதால் இவ்வாற்றலாளனைத் திரட்டலாம் என்று கண்டறிந்தார்கள்.

இவ்வாற்றலாளனைத் தோற்றுவிக்க உத வும் பொறிக்கு டைனமோ அல்லது மின்னாக் கப் பொறி என்று பெயர்.

மேட்டூர், பைக்காரா, சிவசமுத்திரம், பாபநாசம் முதலிய இடங்களில் நீர்வீழ்ச்சி யின் விசையால் பெரிய சக்கரங்களைச் சுழலச் செய்கிறார்கள். சக்கரங்கள் சுழலும் விசை யால், அவற்றோடு இணைக்கப் பெற்றுள்ள உருளையும் சுழலும். இவ்வுருளை காந்தம் அமைந்துள்ள இரண்டு இருப்புக் கோல்க ளுக்கு இடையே சுழலுகின்றது. இவ்வுருளை மின்னாக்கப் பொறியில் உள்ளது. காந்த

இருப்புக் கோல்களுக்கு இடையே உருளை உராய்ந்து உருளும்போது இவ்வாற்றலா ளன் தோன்றுகின்றான். அருகிலும், சேய்மை யிலும் உள்ள இடங்களுக்கு அனுப்பப்படுகி ரான். செப்புக் கம்பிகளே இவன் செல்லும் பாதைகள். நூற்றுக்கணக்கான மைல்களை யும் இவன் கடிவிரைவில் கடப்பான்.

அம்மம்ம! இவன் உலகிற்குச் செய்யும் ஊழியங்கள் மிகப்பல. கிராமங்கள், பட்டணங் கள் ஆகிய எல்லா ஊர்களுக்கும் இவன் செல் கின்றான்; இல்லம் தோறும் ஒளி விளக்காய் விளங்குகின்றான்; காற்றோட்ட மில்லாத அறைகளில் காற்றை வீசச் செய்கிறான்; கடைகள், தெருக்கள், கோயில்கள், அலுவ லகங்கள், பொது மன்றங்கள் முதலிய எல்லா இடங்களிலும் ஒளியுருவைத் தோற்றுவிக்கின்றான். பெரிய நகரங்களில் இரவையும் பகலைப்போன்றே விளக்கம் பெறச் செய்கின்றான்; அல்லும் பகலும் இவனுக்கு ஓய்வில்லை; கிணறுகளி லிருந்து நீர் இறைத்துக் கொடுக்கிறான்; பல் வேறு பொறிகளையும் இயங்கச் செய்கின்றான்.



இல்லங்களிலும், தொழிற்சாலைகளிலும் இவன் செய்யும் ஊழியங்கள் மிகப்பல. நாம்

வானொலியைக் கேட்பதும், தொலைப்பேசியில் பேசுவதும், எக்சிரே (காக்கதிர்) எடுப்பதும், இவ்வாற்றலாளனுடைய பேருதவியைக் கொண்டேயாகும். எண்ணற்கரியனவும், செயற்கரியனவு மாகிய அரிய பணிகளை இவன் மிக எளிதிலும், விரைவிலும் நிறைவேற்றி வைக்கிறான்.

எவ்வளவு ஒப்பற்ற ஊழியனாக உலகிற்குப் பணியாற்றி வரினும், அச்சங்கொண்டே நாம் இவனுடைய ஊழியங்களைப் பெறுகின்றோம். நூறாண்டுகளாக நம்முடன் இருந்து வருகின்றான்; ஆயினும் நம்முடைய கட்புலனுக்குத் தோன்றாமலே இன்னும் மாயமாய் விளங்குகின்றான். இவ்வாற்றலாளன் யார்? (மின்சாரம்)

அருஞ்சொற்கள்

உயர்திணை - மக்கள் இனம். அஃறிணை - மக்கள் அல்லாத மற்ற உயிருள்ளனவும், இல்லனவும். ஊழியன் - வேலைக்காரன். கண் + புலன் = கட்புலன். கடி - மிக.

வினாக்கள்

1. மின்சாரம் தோன்றுவது எவ்வாறு?
2. எவைகளிடத்தில் மின்சாரத்தின் வன்மை செல்லாது?
3. மின்சாரத்தால் நாம் அடைந்துவரும் பயன்கள் யாவை?

22. செய்தித்தாள்

(உரையாடல்)

மகன் : அப்பா, பொழுது விடிகின்றதோ இல்லையோ தினசரி தினமணி வருகின்றது. 'வைகறைத் துயிலெழு' என்று முதல் வகுப்பிலே படித்தேன். ஆனால் வைகறையில்தான் நன்றாக உறக்கம் வருகிறது. தினமணித் தாள் என்னை எழுப்பி விடுகிறது. ஐந்தரை மணிக்கே பேப்பர் பாலன் வருகிறான் 'பேப்பர், பேப்பர்' என்று கதவைத் தட்டுகிறான். இரவில் அவன் தூங்குகிறானோ, இல்லையோ ?

தகப்பனார் : தினமணி ஒரு தினசரித் தாள். ஆகையால் அது தினசரி நம் வீட்டிற்கு வந்து விடுகிறது.

மகன் : காலையில் எழுந்திருந்தால் செய்தித் தாளில்தான் உயிர் இருக்கின்றதே. கடைத்தெருவிற்குச் சென்றால், காலை வேளையில் செய்திப் பேச்சுகள்தான். பத்துப் பேர் எட்டுப் பேராகக் கூடுகிறார்கள். வெகு ஊக்கமாகப் பத்திரிகைக் கடையண்டை நிற்கிறார்கள் ; பன்னாட்டுச் செய்திகளையும் பேசுகின்றார்கள் ; தத்தம் சொல்வன்மையை யெல்லாம் கடைத்தெருவிலேயே காட்டி விடுகிறார்கள்.

தகப்பனார் : செய்தித் தாள்களைப் படிப்பதால் அறிவு வளர்கிறது. உலகநிகழ்ச்சிகள்,

காலநிலை முதலியவைகளெல்லாம் தெரி கின்றன.

மகன் : தெரிந்துகொண்டேன். அதனுல் தான் தாங்களும் செய்திகள் படிப்பதை முதல் வேலையாகச் செய்கிறீர்கள். பிறகு என்ருல் நேரம் இருக்காது.

தகப்பனுர் : மகனே, நீ பேசுவது நகை யாகவும், சுவையாகவும் இருக்கின்றது. பத் திரிகை படிக்காதவர்கள் பாமரர் ஆவார்கள். கிணற்றுத் தவளைபோல் இருப்பவர்கள் வாணுளை வீணுள் ஆக்குபவர்கள்.

பொருள்களின் விலைவாசிகள், பல்வேறி டங்களின் தட்பவெப்ப நிலைகள், இயற்கை மாறுபாடுகள், நம் நாட்டு அரசியல் நிகழ்ச்சி கள், பிறநாட்டுச் செய்திகள் என யாவற்றை யும் இருந்த விடத்தில் இருந்தவாறு அறிகி ரோம். ஓரணு, இரண்டணுச் செலவில், பத்திரிகைகளால் நாம் அடையும் பயன்கள் மிகப்பல.

மகன் : உலகச் செய்திகளை அறிவதால் உண்டாகும் பயன்கள் யாவை?

தகப்பனுர் : ஒரு பகுதியில் பஞ்சம் ஏற்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். செய்தித்தாள்களின் வாயிலாக அந்நிலை மையை மற்றப் பகுதியில் உள்ளவர்கள் அறி

கிருர்கள்; இன்னலுற்ற ஊராருக்கு வேண்டிய உதவிகளை விரைந்து செய்கிருர்கள். இதேமாதிரி ஒரு நாட்டில் ஏதேனும் குறை ஏற்பட்டால் மற்ற நாட்டினர்கள் அவர்களுக்குக் கை கொடுக்க முடிகின்றது.

ஆங்காங்கு ஆக்கப்படும் பொருள்களைப் பற்றிச் செய்தித் தாள்களில் விளம்பரங்கள் வருகின்றன. வர்த்தகர்கள் அப்பொருள்களைக் கொள்முதல் செய்ய முடிகிறது. விலைவாசிகளைப் பற்றிய செய்திகள் வெளிவருகின்றன. ஆகையால் வர்த்தகர்கள் அப்போதப்போதைக்கு ஏற்றவாறு விற்று முதல் செய்யலாம். "புயல் வரப்போகிறது; அடைமழை பெய்யப்போகிறது" போன்ற இயற்கையின் மாறுதல்களைப் பற்றி எல்லோரும் அறிந்துகொண்டு அவற்றிற் கேற்றபடி எச்சரிக்கையாக இருக்கலாம். இன்னவிடத்தில் இன்ன திருவிழா நடைபெறுகிறது; என்பதைப் பத்திரிகையின் உதவியால் நாலாப் பக்கத்தில் உள்ளவர்களும் தெரிந்துகொள்ளவும், அங்குச் செல்லவும் முடிகிறது.

பெரிய படிப்பாளிகளும், ஆராய்ச்சியாளர்களும் தாம் கற்றுணர்ந்த அரிய நுட்பங்களைப் பத்திரிகைகளில் வெளியிடுகிருர்கள். அவைகளை எல்லோரும் படித்தறிய முடிகிறது.

ஆனால் தினசரிப் பத்திரிகைகளை மட்டும் படித்தால் போதாது. வாரமொருமுறை, மாதமொருமுறை, இரண்டு வாரத்திற்கு ஒரு முறை, காலாண்டிற்கு ஒரு முறை வெளியாவன ; ஆண்டுமலர்கள் ஆகிய எல்லாப் பத்திரிகைகளையும் படிக்கவேண்டும்.

மகன் : ஆம், அப்பா. **ஆனந்த விகடன், கல்கி, கலைமகள்,** குமுதம் முதலிய பற்பல பெயர்களைப் பெரிய விளம்பரத் தாள்களில் பார்க்கிறேன். இப்பொழுதான் அவற்றின் சிறப்புக்களைத் தெரிந்து கொண்டேன். இனி நானும் பத்திரிகைகள் படிக்கிறேன்.

அருஞ்சொல் விளக்கம்

தினசரி - நாள்தோறும். தினமணி ஒரு செய்தித்தாள். பத்திரிகை - செய்தித்தாள். சொல்வன்மை - பேசும் திறமை, தத்தம் - தம்தம், அவரவர்களுடைய. நகை - சிரிப்பு. பாமரர் - ஒன்றும் தெரியாதவர்கள். பஞ்சம் - பற்றுக் குறை. புயல் - பெருங்காற்று. அடைமழை - விடாத மழை.

வினாக்கள்

1. ‘தினசரி’ இச்சொல்லின் பொருளை விளக்கு.
2. காலை வேளைகளில் கடைத் தெருக்களில் காணும் காட்சியைக் கூறு.
3. நீ என்னென்ன தாள்களைப் படிக்கின்றாய் ?
4. செய்தித்தாள்களின் பயன்களைக் கூறு.

23. கவியரசரும், புவியரசரும் (1)

மன்னனும் மாசறக் கற்ருேனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்ருேன் சிறப்புடையன்—மன்னர்க்குத்
தன்தேச மல்லாற் சிறப்பில்லை கற்ருேர்க்குச்
சென்றவிட மெல்லாம் சிறப்பு.

என்றவாறு சென்றவிட மெல்லாம் சிறப்புற்ற பெரும் புலவர் கம்பர். இவரைக் கவியரசர் என்று உலகம் போற்றும். மக்கள் ஒருவரோடொருவர் பேசுகையில் " நீர் என்ன கம்பர் கழற்றியோ " என்று கேட்பது உண்டு. இக்கூற்றினுல் கம்பர் என்ருலே பெருந்திறமை யுடையவர் என்று மக்கள் பொருள் கொள்கின்றனர் என்று விளங்குகிறது.

கவியரசராகிய கம்பர் புவியரசனும் சோழனுடன் சாலவும் நட்புக் கொண்டு விளங்கினுர். மன்னன் அவருக்குத் தம்மோடொப்பச் சீரும் சிறப்புமளித்து, அவரைப் பேணி வந்தான். அவ்விருவரும் இணைபிரியா நண்பர்களாயொழுகி வருங்காலத்தே ஒருநாள் பூங்காவிற்குச் சென்று இயற்கை வனப்பைக் கண்டு மகிழ்ந்தனர்.

அதுபோது மன்னன் மலர் முகத்துடன் ஆண்டிருந்த மலர்களையும், செடி கொடிகளையும் நோக்கியவாறு புன்னகை கொண்டான்.

அவ்வியப்பைக் கண்ணுற்ற கவியரசர் "புவியரசரே, இருந்தாற்போல் இருந்தவாறு நீவிர் புன்னகை கொண்டது என்னே!" என்று கேட்டனர். அதற்குக் கொற்றவன் "இந் நிலப்பரப்பும், நிலத்திலுள்ள எல்லாப் பொருள்களும் எமக்குள் அடக்கம் அன்றோ" என்றான். அக்கூற்றைக் கூறிமுடிக்குமுன் கம்பர் "என்னே மன்ன, ஐய மென்னை! இந் நிலப்பரப்பு தம்முள் அடக்கம். தாம் எம்முள் அடக்கம்" என்று கடிதிற் கூறினர்.

புலவர் கூறிய இம்மொழிகளைக் கேட்டதும் வளவன் வெட்கமும், சினமும் கொண்டான். சிறிது பொழுது வாளா விருந்த பின்னர், ஒன்றும் பேசாதவனாய் அரண்மனை புக்குத் தன்னுடைய தனியறை சென்றான். அன்றிரவு அவன் உணவும் அருந்தவில்லை. என்னென்று பகர்வேன் கம்பர் செருக்கையும் துணிவையும்! இவருக்கு உலகினர் அளிக்கும் பெருமையெல்லாம் எம்பால் இருத்தலினாலன்றோ! அந் நிலையை யெண்ணாது எம்மை யெள்ளிப் பேசியது இழுக்கினும் இழுக்கன்றோ! என்று பலவாறு தன்னகத்தே எண்ணி எண்ணித் துயிலுறாதவனாய் வருந்தினன். அரசியாலும், அரண்மனையிலிருந்த மற்றெவராலும், அவனைத் தேற்றுவிக்க இயலவில்லை. 'காவ

லன் ஏதோ கவலையுறுகின்றனன்' என்ற செய்தி ஊர்க்குள் எங்கும் பரவிற்று. மன்னர்க்குக் குறை யென்றால் கலங்காதார் எவர்!

இந்நிலையில் தாசி பொன்னி என்பாள் சோழன் அரண்மனை சென்று, அவனைப் புன் முறுவலுடன் நோக்கி "கலக்கம் கொள்ளற்க; நும்மை நோக்கித் தன்னுள் அடக்கமென மொழிந்தவனும் அக்கம்பனை என்னுள் அடக்கம் ஆக்குவேன்; நடந்த நிகழ்ச்சியை மறந்திடுக; நாளையே என் வன்மையைக் காண்பீர்" என்று கூறி விடை பெற்றனள். பொன்னியின் மொழிகளால் களிப்புற்ற காவலனும் துயில் கொண்டான்.

மறுநாள் பரிதிதோன்றிச் சிறிது போதில், பொன்னி வாழ்ந்த தெருவின் வழியே கம்பர் சென்று கொண்டிருந்தார். பொன்னியவரைக் கூப்பிட்டு, இல்லத்தினுள் அழைத்துச் சென்றனள். "கற்றவர் ஏறே, கருணை கூர்க; என் விழைவை நிறைவேற்றுவீரோ?" என்று கேட்டனள். கம்பர் "பொன்னியே, நின் விழைவை எளிதில், நிறைவேற்றுவேன்; கலைமகளருளிருக்கக் கவலை கொண்டிலன் யான்" .என்றார். 'புலவீர், நீவீர் என்னுள் அடக்கம்' என ஓர் ஓலை எழுதி என்பாற் கொடுப்பீரோ? என்று கூறிக் கொண்டே பனை

யோலை ஏடும், எழுத்தாணியுங் கொணர்ந்து கொடுத்தாள்.

சிறிதும் நேரம் போக்காது கம்பர் "தாசி பொன்னிக்குக் கம்பன் அடிமை" என்று அவ் வோலையில் எழுதித் தந்து விடை பெற்றேகினர்.

உடனே பொன்னி அவ்வோலையுடன் சோழன்பால் சென்று அதை அவனிடம் கொடுத்தாள். கம்பர் எழுதிய வாக்கியத்தைத் திரும்பத் திரும்பப் படித்தான் சோழன். முதல் நாள் கம்பர் தன்னை மதியாதுரைத்த உரையையும் மறந்தான்; அன்று பிற்பகலே அவை கூட்டினன். கம்பரும் வழக்கம்போல் அவையில் இருந்தனர். யாவரும் கேட்குமாறு சோழன் கம்பரை அழைத்து 'தாசிக்குக் கம்பன் அடிமை என்ற இந்த வாக்கியம் நும்முடைய கையெழுத்தன்றோ' என்று உரக்கக் கேட்டான். 'தாசி பொன்னிக்குக் கம்பன் அடிமையா' என்று நகைத்தனர் அவையிலிருந்தோர்.

இருக்கைவிட்டு எழுந்தார் கம்பர். "நகை என்னே? சொற்பொருள் சிந்தியாது பித்துக் கொண்டீர் போலும். தாய் ஸ்ரீ பொன்னிக்குக் கம்பன் அடிமை" என்பது என் கூற்று. "இம்மொழியில் இழிவு யாது? உலகிற்குத்

தாயாகிய இலக்குமிக்கு யான் அடிமைதானே?'' என்றார்.

பொருளறியாது தலை நிமிர்ந்தவர்கள் கம்பரின் விளக்கம் கேட்டுத் தலைகுனிந்தனர். மன்னனும் சீற்றம் கொண்டான். "பூங்காவில் தனியே இழிவு படுத்தினர் கம்பர். இன்று அவைக் களத்தே என் எண்ணத்திற்குத் தோல்வி யளித்தார்'' என்று கருதினன்.

"கம்பரே எம் நாடு கடந்து செல்க'' என்றான். கம்பர் கலைப்பரோ இக்கூற்றைக் கேட்டு? "வேந்தே, இதோ அகன்றேன்; இனி மறுமுறை ஈண்டு உறநேருங்கால் உம்மைப் போல் புவியரசை எமக்கு வேலை பணியாளாகக் கொண்டு வருவேன். கலைமகள் காக்க'' என்று உரைத்து அவ்விடம் விட்டு அகன்றனர்.

அருஞ்சொல் விளக்கம்

கவி - செய்யுள். கவி - செய்யுள் இயற்றும் புலவர். கவியரசர் - புலவர்களிற் சிறந்தவர். புவியரசர் - நாடாளும் மன்னர். புவி - பூமி, நிலம். புன்னகை - புன்சிரிப்பு, வாயைத் திறவாமல் இளஞ்சிரிப்பு சிரித்தல். தன்னகத்தே - தனக்குள். அகம் - உள்ளம். பரிதி - ஞாயிறு, சூரியன். கலைமகள் - சரசுவதி - படிப்பிற்குரிய தெய்வம். வளவன் - சோழன். வளநாடு - சோழநாடு.

வினாக்கள்

1. சோழன் கம்பரை எவ்வாறு பேணி வந்தான்?
2. பூங்காவில் நிகழ்ந்தது என்ன?
3. அரசவையில் நிகழ்ந்தது என்ன?

24. கவியரசரும், புவியரசரும் (2)

"விளையாட்டே வினையாகும்" என்ற முறையில் நட்பின் மிகையால் கம்பர் சோழரை 'நீர் எம்முள் அடக்கம்' என்றார். அவ் விளையாட்டுச் சொல் வினை ஆயிற்று. அச் சொற்களைச் சோழன் முரண்படக் கொண் டான். அவ்வினையும் மறுநாளே வளர்ந்தது. முடிவில் கம்பர் சோழனையும், சோழ நாட்டை யும்விட்டு நீங்க நேர்ந்தது.

வள நாட்டைவிட்டு வெளியேறிய கம்பர் செல்லும் வழியில் படாத பாடும் பட்டார். பின்னர் ஒருவாறு வழி நடந்து சேர மன்ன னிடம் சென்றார். மன்னனைக் கண்டு "கம்ப ரிடம் யான் அடைப்பக்காரனாய் இருந்தேன். புலவரும், மன்னனும் மனவேற்றுமை கொள்ளு மாறு நேர்ந்தது. அவர் அந் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டார். யான் பிழைப்பை நாடித் திருமுன்னர் வந்தேன்" என்றார்.

கம்பரிடம் வேலைபார்த்ததாகக் கூறியதால் சேர மன்னன் அவரைத் தம்மிடமே அடைப் பக்காரப் பணியில் வைத்துக்கொண்டான்.

அவ்வாறு இருக்கையில் ஒருநாள் சேரன் அவையில் ஒரு சொற்பொழிவில் 'கம்பர் இயற் றிய இராமாயணத்தில் ஒரு செய்யுளுக்கு

நுட்பப் .பொருளையுணராமல் குழறினர்கள் அங்கிருந்த புலவர்கள். அப்போது அடைப்பக் காரர் கோலங்கொண்டவர் அவையோரை நோக்கி ‘ இச் செய்யுளுக்குக் கம்பர் விளக்கம் உரைக்குங்கால் நான் கேட்டிருக்கிறேன்’ என்று தொடங்கி, அதன் பொருள் நுட்பங்களை விளக்கினர். அவருடைய விளக்கத்தைக் கேட்டுச் சேரன் இன்பமடைந்தான். அன்று முதல் அவரையே அவைப் புலவராகக் கொண்டான்.

“வேற்றூரிலிருந்து வந்தான் ஒருவன் ஏற்றம் பெற்றான்” என்றனர் உள்ளூர்ப் புலவர்கள். அவன்மீது சீற்றமும், அழுக் காறும் கொண்டனர். எவ்வாறே சூழ்ச்சி செய்து, அடைப்பக்காரப் புலவரை வீழ்ச்சி அடையும்படி செய்ய முயன்றனர். கலைமகள் கம்பரைக் காத்தாள். அழுக்காறு கொண்ட வர்களே ஒறுக்கப்படும் நிலைமை ஏற்பட்டது. அவர்கள் கம்பரிடமே தஞ்சம் புகுந்து மன்ன ஞல் மன்னிக்கப்பட்டனர். அதன் பிறகு வெளியூரிலிருந்து வந்தவர் அடைப்பக்காரர் அல்லரென்பதையும், அவரே கம்பர் என்பதை யும் மன்னன் தெரிந்து கொண்டான். பெரும் புலவரை வணங்கி அறியாமல் செய்த பிழைக் காக வருந்தினன்.

"புலவர் மன்ன, என்னை மன்னித்தருள்க; உற்றபோது யான் உம்மிடம் பணியாளன் கோலம் கொள்வேன்" என்று கூறினுன். அவரைச் சிறப்புறப் போற்றி வந்தான்.

கம்பர் நிலை இவ்வாருக, சோழன் நிலையையும் அறிவோம். 'ஆத்திரக் காரனுக்குப் புத்தி மட்டு' என்பர். "சிந்தியாது யான் சினங் கொண்டேனே, விளையாட்டுக் கூற்றை வினையாகக் கொண்டேனே; என்னுடைய அவை மதியில்லா வானம் போல் அல்லவோ சிறப் பற்று விட்டது" என்று வருந்தினுன். கணமும் விட்டுப்பிரியாத கம்பரை நீடுகாலம் அன்ருே பிரிந்திருக்க நேர்ந்தது! அவர் சேரன் அவையில் விளங்கியதை ஒற்றரால் அறிந்தான்; ஆள் அனுப்பி அவரைத் தம் மிடமே மீண்டும் வருமாறு வேண்டினுன். சோழனுடைய பிழையை மறந்தார் புலவர்.

சேரனிடம் விடைபெற்றுக் கொண்டு சோளுடு சேர்ந்தார். முன்னமே கூறியவாறு சேரன் மாறுவேடம் பூண்டு, அடைப்பக்காரன் போலும் கம்பருடன் கூடச் சென்ருன். அவன் அரண்மனை புக்கபின், அவருடைய கண் சாடை கண்டு விரைந்தகன்று தன் பதியை அடைந்தான்.

கண்ணை இழந்தவர் மீண்டும் கண்ணைப்

பெற்ருல் எவ்வாறு மகிழ்வார்களோ, அஃதே போன்று கம்பரைக் கண்ட சோழன் களிப் படைந்தான். முன்போலவே அவரைச் சிறப் புறப் பேணினன். ஆயினும் ஒரு கூற்றை அவன் மறக்கவில்லை. தனியே உரையாடுகை யில் கம்பரை நோக்கிப் "புலவீர், அன்று கூறிப் போந்தவாறு எம் போன்ற மன்னனைத் தம்முடன் பணியாளனுக தம்முடன் பணியாளனாக அழைத்து வந்தீரோ" என்ருன்.

அதுகேட்ட கம்பர் "மதியுடை மன்ன, புலவர் பேச்சு பொய்யாமோ? யான் அரண் மனையினுள் வருங்கால், என்னுடன் பணி யாளன் போன்றே வந்தவரைக் காணவில்லை போலும். கண்சாடை காட்டி அவரைப் போய் விடுமாறு கூறினேன். சேரன் அன்ருே அவர்?" என்று பகர்ந்தார். மூக்கிலே கை வைத்தான் சோழன்; கம்பரைக் கட்டி அணைத் தான். "புலவர் பெருமானே, கலைமகள் உம்மைக் கைவிடுவாளோ? கருணை கூர்ந்து என்னை வாழ்த்திடுக" என்ருன்.

பிறகு அவர்கள் பண்டு போலவே உள்ளம் ஒன்றிய கேண்மையுடன் நன்றே வாழ்ந்தனர்.

அருஞ்சொல் விளக்கம்

வினை - செயல். இங்கு வம்பாக முடிந்தது என்று பொருள். மனவேற்றுமை - பகை, வெறுப்பு. விளக்கம் - தெளிவான பொருள். வேறு + ஊர் - வேற்றூர். தஞ்சம் - அடைக்கலம். மதி - அறிவு; சந்திரன் அதாவது திங்கள் என்றும் பொருள்படும். வினைச் சொல்லாகவும் வரும். மதி - பெருமைப்படுத்து, பதி - ஊர். கேண்மை - நட்பு.

வினாக்கள்

1. கம்பர் சேரனை அடைந்து என்ன கூறினார்?
2. சேரன் அவையில் நிகழ்ந்தது என்ன?
3. கம்பர் இல்லாத சோழன் அவை எவ்வாறு இருந்தது?
4. கம்பரைக் கண்ட சோழன் எவ்வாறு களிப்படைந்தான்?

இலக்கணம்

1. அப்பா எப்போது வருவார்?—இவ்வாக்கியத்தில் அப்பா எழுவாய். வருவார்—பயனிலை. எதை வருவார்? விடை இல்லை, ஆகையால் செயப்படு பொருள் இல்லை.

   சிலவாக்கியங்களில்செயப்படுபொருள்இருக்கும். சில வாக்கியங்களில் செயப்படுபொருள் இருக்காது.

   எழுவாயும் பயனிலையும் எல்லா வாக்கியங்களிலும் உண்டு.

பயிற்சி

1. செயப்படுபொருள் இல்லாத வாக்கியங்கள் மூன்று கூறு.
2. செயப்படுபொருள் உள்ள வாக்கியங்கள் மூன்று கூறு.

---

25. செய்யுட் பகுதி

வாழ்த்து

1. தேவாரம்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே

—திருநாவுக்கரசர்.

2. திருவாசகம்

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான்எனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே

—மாணிக்கவாசகர்.

3. திவ்யப் பிரபந்தம்

பச்சைமா மலைபோல் மேனி
    பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே
    ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய்
    இந்திர லோக மாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
    அரங்கமா நகரு ளானே

—தொண்டரடிப் பொடி ஆழ்வார்.

4. தேம்பாவணி

அறம்தாய் தந்தை சுற்றமும்மற்
றனைத்தும் நீயே கதிநீயே
பிறந்தாய் உலகிற் குயிர்அன்னேய்
பிறந்தெம் துயருமெம் பகையும்
துறந்தாய் எங்கள் சிறைதீர்த்தாய்
துகள்பூட் டியவீட் டுயர்வாயில்
திறந்தாய் இவைகள் யாவருமறியத்
திறன்செய் தருள்செய் திரங்காயோ

—வீரமாமுனிவர்.

5. சீருப்புராணம்

இருவிழி சிவந்து கனற்பொறி தெறிப்ப
எடுத்தகைக் கதையினல் உறுக்கி
வருமவர் எதிர்நின் றெருமொழி கேட்ப
மறுமொழி கொடுத்திட வறியேன்
தருமமும் பொறையும் அறிவுமற் றறிந்துன்
றன்னையும் என்னையும் அறியப்
பெருவரம் தருவாய் ஆதிநா யகனே
பேதியாச் சோதிமா முதலே

—உமறுப்புலவர்.

6. திருக்குறள்

அகர முதல எழுத்தெலா மாதி
பகவன் முதற்றே யுலகு. 1.

கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்ருள் தொழாஅ ரெனின். 2.

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்.
நிலமிசை நீடுவாழ் வார். 3.

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில. 4.

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. 5.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார். 6.

தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது. 7.

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்த லரிது. 8.

கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை. 9.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார். 10.

அருஞ்சொல் விளக்கம்

ஆதிபகவன் - முழுமுதற் கடவுள். வாலறிவன் - பேரறிவாளனாகிய இறைவன். மலர் மிசை - உள்ளமாகிய மலரினுள். வேண்டுதல் - விருப்பம். வேண்டாமை - வெறுப்பு. இருவினை - நல்வினை, தீவினை. (புண்ணிய பாவங்கள்) பொறி - மெய், வாய், கண், மூக்கு, செவி :— ஐந்து—உணர்தல், சுவையறிதல், பார்த்தல், முகர்தல், கேட்டல் ஆகிய ஐந்து செயல். தனக்கு உவமை இல்லாதான் - தனக்கு ஒப்பு இல்லாத கடவுள். பிறவாழி - பிறவிக்கடல். தாள் - திருவடி.

குறிப்புரை

வாழ்த்து

1. தேவாரம் :—திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தர மூர்த்திகள், மாணிக்கவாசகர் இந்நால்வரும் சைவ சமயாச்சாரியர் எனப்படுவர். இவர்களில் முதல் மூவரும் பாடியது தேவாரம். ஒரு மாலையில் பல பூக்கள் தொடுக்கப்பட்டிருப்பது போல் துதிப்பாக்களால் தொகுக்கப் பெற்ற நூல்.

2. திருவாசகம் :—மாணிக்க வாசகர் பாடிய பாடல்களின் தொகுதி திருவாசகம். கடவுள் மீது பாடப் பெற்றதால் சிறந்த வாக்கு, அதாவது திருவாசகம் என்ற பெயர் ஏற்பட்டது.

3. திவ்யப் பிரபந்தம் :—வைணவ சமயத்தார்களாகிய பன்னிரண்டு ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுதி நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் எனப்படும்.

4. தேம்பாவணி :—ஏசுநாதரின் தந்தையாருடைய வரலாற்றைப் பற்றிக் கூறும் நூல். வீரமாமுனிவர் என்னும் கிருத்தவப் பாதிரியார் 18ஆம் நூற்றுண்டில் பாடியது. இவர் இத்தாலியிலிருந்து இங்கு வந்தவர். இவருடைய இயற்பெயர் வேறு.

5. சீருப்புராணம் :—இந்நூல் நபி நாயகத்தின் வரலாற்றைப் பற்றிக் கூறுவது. உமறுப் புலவர் என்னும் முஸ்லீம் புலவர் பாடியது. இப்புலவர் சீதக்காதி என்னும் செல்வரால் ஆதரிக்கப்பட்டார். காலம் பதினேழாம் நூற்றுண்டு.

6. திருக்குறள் :—இது ஒரு நீதி நூல். (அறநூல்) திருவள்ளுவர் இயற்றியது. இங்குப் பாடமாக வந்துள்ளவை கடவுள் வாழ்த்துப்பாக்கள்.

1. "மாசில் வீணையும்" என்று தொடங்கும் பாடல் திருநாவுக்கரசர் பாடியது. இவரை அப்பர் சுவாமிகள் என்றும் கூறுவர். இவர் திருவாமூரில் பிறந்தவர்; கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்; சைவத் தலங்கள் தோறும் சென்று இறைவனைப் பாடிச் சைவ சமயத்தைப் பரப்பினவர்.

மாசில் (மாசு + இல்) குற்றமற்ற, மதியம் - சந்திரன், மூசு - நெருங்கி, பொய்கை - குளம், நீழல் - நிழல்..

2. 'வானாகி' என்று தொடங்கும் பாடலைப் பாடியவர் மாணிக்கவாசகர். இவர் திருவாதவூரில் பிறந்தவர்; கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தார்; அரிமத்தன பாண்டியனுக்கு மந்திரியாகவும் இருந்தவர்.

வான் - விண், ஊன் - உடல், வளி - காற்று, நின்றாயை - நின்றவனை.

3. "பச்சைமா மலை" என்று தொடங்கும் பாடல் தொண்டரடிப் பொடி ஆழ்வார் பாடியது. இப்பாடல் திருமாலை என்ற நூலில் உள்ளது.

மேனி - உடல், பச்சைமா மலை - பச்சை நிறமுள்ள பெரிய மலை, கமலம் - தாமரை.

4. 'அறம் தாய்' என்று தொடங்கும் செய்யுள்.

அன்னாய் - போன்றவனே, வீடு - முத்தி, துறந்தாய் - நீக்கியவனே.

5. 'இருவிழி' என்று தொடங்கும் செய்யுள்.

அரு - உருவற்றது, கனற்பொறி (கனல் + பொறி) தீப்பொறி, உன்னி - எண்ணி.

நீதிப் பகுதி

1. நீதிவெண்பா

நல்லோரும் பிறப்பிடமும்

தாமரைபொன் முத்துச் சவரங்கோ ரோசனைபால்
பூமருதேன் பட்டு புனுகுசவ்வா—தாமழல்மற்
றெங்கே பிறந்தாலும் எள்ளாரே நல்லோர்கள்
எங்கே பிறந்தாலும் என். 1.

தோற்றத்தால் பயனில்லை

கற்பூரம் போலக் கடலுப் பிருந்தாலும்
கற்பூரம் மாமோ கடலுப்பு—பொற்பூறும்
புண்ணியரைப் போல இருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணியர் ஆவாரோ? புகல். 2.

கற்றவர்க்கு நிகரில்லை

கல்லார் பலர்கூடிக் காதலித்து வாழினும்நூல்
வல்லான் ஒருவனையே மானுவரோ?—அல்லாரும்
எண்ணிலா வான்மீன் இலகிடினும் வானகத்தோர்
வெண்ணிலா ஆமோ? விளம்பு. 3.

உத்தமர் உத்தமரே

பொன்னுங் கரும்பும் புகழ்பாலும் சந்தனமும்
சின்னம் படவருத்தம் செய்தாலும்—முன்னிருந்த
நற்குணமே தோன்றும்; நலிந்தாலும் உத்தமர்பால்
நற்குணமே தோன்றும் நயந்து. 4.

தீயவர்பால் கல்வி

தீயவர்பால் கல்வி சிறந்தாலும் மற்றவரைத்
தூயவரென் றெண்ணியே துன்னற்க—சேயிழையே!
தண்ணொளிய மாணிக்கம் சர்ப்பம் தரித்தாலும்
நண்ணுவரோ மற்றதனை நாடு. 5.

2. அறநெறிச்சாரம்

கடும் சொல்லைப் பொறுத்தல்

எள்ளிப் பிறருரைக்கும் இன்னுச்சொல் தன்னெஞ்சில்
கொள்ளிவைத் தாற்போல் கொடிதெனினும்—மெள்ள
அறிவென்னும் நீரால் அவித்தொழுகல் ஆற்றின்
பிறிதொன்றும் வேண்டா தவம். 1.

தன்னை ஒருவன் இகழ்ந்துரைப்பின் தான்அவனைப்
பின்னை உரையாப் பெருமையோன்—முன்னை
வினைப்பயனுன் ஆயிற்றுல் என்றதன்கண் மெய்ம்மை
நினைத்தொழிய நெஞ்சின்நோய் இல். 2.

புறம் கூறுமை

முன்னின் றெருருவன் முகத்தினும் வாயினும்
கன்னின் றுருகக் கலந்துரைத்துப்—பின்னின்
றிழித்துரைக்கும் மாந்தரை அஞ்சியே தேவர்
விழித்திமையா நின்ற நிலை. 3.

ஈதலின் சிறப்பு

பரப்புநீர் வையத்துப் பல்லுயிர்கட் கெல்லாம்
இரப்பவரின் வள்ளல்கள் இல்லை—இரப்பவர்
இம்மைப் பயனும் இனிச்செல் கதிப்பயனும்
கொண்மின் எனக்கொடுத்த லால். 4.

இன்றே அறம் செய்க

இன்றுளார் இன்றேயும் மாய்வர் ; உடையதூஉம்
அன்றே பிறருடைய தாயிருக்கும் ;—நின்ற
கருமத்த தல்லாத கூற்றின்கீழ் வாழ்வார்
தருமம் தலைநிற்றல் நன்று. 5.

3. ஆசாரக் கோவை

நல்லொழுக்கங்கட்குக் காரணம்

நன்றி யறிதல் பொறையுடைமை இன்சொல்லோ
டின்னாத எவ்வுயிர்க்குஞ் செய்யாமை கல்வியோ
டொப்புர வாற்ற வறிதல் அறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்டல் இவையெட்டும்
சொல்லிய ஆசார வித்து. 1.

வைகறையில் செய்யவேண்டியவை

வைகறை யாமம் துயிலெழுந்து தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதில்
தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை. 2.

ஐம்பெருங்குரவர் வழிபாடு

அரசன் உவாத்தியான் தாய்தந்தை தம்முன்
நிகரில் குரவர் இவரிவரைத்
தேவரைப் போலத் தொழுதெழுக வென்பதே
யாவருங் கண்ட நெறி. 3.

சிந்திக்கலாகாதவை

பொய்குறளை வெளவல் அழுக்கா றிவைநான்கும்
ஐயந்தீர் காட்சியார் சிந்தியார்—சிந்திப்பின்
ஐயம்புகுவித் தருநிரயத் துய்த்திடும்
தெய்வமும் செற்று விடும். 4.

கேள்வியுடையார் செயல்

பழியார் இழியார் பலருள் உறங்கார்
இசையாத நேர்ந்து கரவார் இசைவின்றி
இல்லாரை யெள்ளி இகழ்ந்துரையார் தள்ளியும்
தாங்கரும் கேள்வி யவர். 5.

—பெருவாயின் முள்ளியார்.

4. திருக்குறள்

கல்வி

கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. 1.

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு. 2.

புதல்வரைப் பெறுதல்

மகன் தந்தைக் காற்று முதவி யிவன் தந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல். 3.

இனியவை கூறல்

இனிய வுளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. 4.

செய்ந்நன்றி யறிதல்

காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. 5.

அடக்க முடைமை

யாகாவா ராயினும் நாகாக்கக் காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. 6.

தீவினை யச்சம்

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப்படும். 7.

இன்னா செய்யாமை

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல். 8.

அறிவுடைமை

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. 9.

மருந்து

மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி யுணின். 10.

குறிப்புரை

நீதிவெண்பா

1. சவரம் - சவரி, மரு - வாசனை, அழல் - நெருப்பு, எள்ளார் - இகழார்.

2. பொற்பு - அழகு, புல்லியர் - அற்பர், புகல் - சொல்.

3. காதலித்து - அன்புற்று, நூல்வல்லான் - கற்றவன், மானுவரோ - ஒப்பாவரோ, அல் ஆரும் - இருள் நிறைந்த, வான்மீன் - நட்சத்திரங்கள், இலகிடினும் - விளங்கினாலும், வானகத்து - ஆகாயத்தில், வெண்ணிலா - சந்திரன், விளம்பு - சொல்.

4. சின்னம்பட - சிறுமை அடையும்படி, (காய்ச்சல், அடித்தல், தேய்த்தல்) நலிந்தாலும் - துன்புற்றாலும், நயந்து - விரும்பி.

5. தூயர் - பரிசுத்தமானவர், துன்னற்க - நெருங்காதே, சேயிழையே - செம்மையான ஆபரணங்களை உடையவளே, தண்ஒளிய - குளிர்ந்த ஒளியை உடைய, தரித்தாலும் - வைத்துக்கொண்டிருந்தாலும், நண்ணுவரோ - அடைவார்களோ, நாடு - ஆராய்ந்து பார்.

அறநெறிச்சாரம்

தரும மார்க்கத்தின் நுட்பங்களைப் பற்றிக் கூறும் நூல் என்பது இதன் பொருள்; இதன் ஆசிரியர் திருமுனைப்பாடியார். அவர் மதம் சமணம்.

1. எள்ளி - இகழ்ந்து, இன்னாச்சொல் - இனிமையாகாத சொல்.

2. எதிர் இகழாமை பெருமை தரும் என்பது கருதிப் 'பெருமையோன்' என்றார், நோய் - வருத்தம்.

3. கல் நின்று உருக - கல்லும் மெல்லக் கரையும்படி, தேவர் - கண்ணை இமையாதவர்கள்: இமையாமைக்கு இங்கே வேறு காரணம் கற்பித்தார்.

4. இரப்பவர் - பிச்சை எடுப்பவர், கொண்மின் - கொள்ளுங்கள். இரப்பாருக்கு ஈதல் கடன் என்பது கருத்து.

5. உடையதூஉம் - நமக்குரிய பொருளும், யாக்கையும் செல்வமும் நிலையில்லை; ஆதலால் அறம் செய்ய வேண்டும் என்பது கருத்து.

ஆசாரக் கோவை

(இந்நூல் பதினெண்கீழ்க் கணக்கு என்ற வகையைச் சேர்ந்தது.)

ஆசாரக் கோவை:—நல்லொழுக்க நெறிகளைத் திரட்டிக் கூறும் நூல். இந்நூலை இயற்றியவர் பெருவாயின் முள்ளியார் என்னும் சைவர். இவர் பிறந்த ஊர் வண் கயத்தூர்.

1. ஆசார வித்து - ஒழுக்கங்களுக்குக் காரணம், நட்டல் - நட்புக்கொள்ளுதல், இன்னாத - துன்பம் தரும் செயல்கள்.

2. வைகறை - விடியற்காலை, (இரவில் நான்காவது யாமம், மணி 3—6 வரையுள்ள காலம்), வாய்வதில் - வாய்ப்பு உடைத்தாகி, முந்தையோர் - அறிஞர்களாகிய முன்னோர்.

3. தம்முன் - தனக்கு மூத்தவன், குரவர் - குரு மார்கள்.

4. குறளை - கோள்சொல்லுதல், ஐயந்தீர் காட்சியார் - சந்தேகம் தீர்ந்த அறிவுடையவர், செற்று - அழித்து.

5. தாங்குஅரும் - தாங்குதற்கு அரிய, கேள்வியவர் - நூற்கேள்வி உடையவர், இசையாது - தமக்குப் பொருந்தாத, கரவார் - ஒளிக்க மாட்டார், இசைவு - முறை, எள்ளி - ஏளனம் பண்ணி.


திருக்குறள்

கசடு அற - பிழை இல்லாமல், குற்றம் நீங்க, கற்பவை - கற்கத்தக்கவை, தொட்டனைத்து - தோண்டுமளவும், கற்றனைத்து - கற்குமளவும், என்னோற்றான்கொல் - என்ன தவம் செய்தானோ, இன்னாத - துன்பந்தரும் சொற்கள், ஞாலம் - உலகம், காலத்தினால் - தக்க சமயத்தில், சோகாப்பர் - துன்பப்படுபவர், இழுக்கு - குற்றம், தீயவை - கெட்டசெயல்கள், இன்னா - துன்பம், ஒறுத்தல் - கண்டித்தல், மெய்ப்பொருள் - உண்மையான கருத்து, யாக்கை - உடல், அற்றது - செரிமானம் ஆனதை, போற்றி - அறிந்து.

மங்கல வாழ்த்து

பருவமழை பொய்யாது பெய்ய வேண்டும் [டும்
பயிர்களெல்லாம் செழித்தோங்கி வளர வேண்
தருமநெறி தவறாது தழைக்கவேண்டும்
சாதிமதச் சண்டையெல்லாம் ஒழியவேண்டும்
திருமகளும் கலைமகளும் சிறக்கவேண்டும்
தேசாபிமானமெங்கும் திகழவேண்டும்
கருமமெலாம் நற்கரும மாகவேண்டும்
காந்திமதி நின்னடிகள் வாழ்த்தினேனே.

—கவிமணி. தேசிகவிநாயகம் பிள்ளை.





போன் : 3579